# ரொமான்ஸ் ரகசியங்கள்



இன்றைய இயந்திரமயமான வாழ்க்கை முறையும் சுழற்றியடிக்கும் வேலைப்பளுவும் சேர்ந்து கொண்டு தம்பதிகளுக்குள் இருக்கும் நெருக்கத்தை சுருக்குகின்றனதான். பாலைவனத்திலேயே ஒரு சோலை இருக்கும்போது, நாம் வாழும் வாழ்க்கைக்குள் பசுமையை இன்னும் கொஞ்சம் கூட்டிக் கொள்ள முடியுமே! அதற்கு வழிகாட்டத்தான் இந்தப் புதிய பகுதி!

'**தி**னமும் என்னை கவனி!'

- லாரியில் இருக்கும் பேட்டரி பாக்ஸில் இப்படி ஒரு வாசகம் இருக்கும்.. பார்த்திருக்கிறீர்களா?

லாரியின் பேட்டரிக்கு மட்டுமல்ல.. தம்பதிகளின் இல்லறம் நல்லறமாகப் பயணிக்கவும், இருவருக்கும் இடையே உள்ள ரொமான்ஸ் பேட்டரி சார்ஜ் இறங்காமல் இருக்கவும்கூட, அதற்கு தினசரி கவனிப்பு மிக மிக அவசியம்!


"என் வீட்டுக்காரரை தினமும் கவனிச்சிட்டுதான் இருக்கேன். வாய்க்கு ருசியா சமைச்சுப் போட்டு, அவர் துணியெல்லாம் துவைச்சுப் போட்டு.." என்று ஒரு லிஸ்ட் உங்களிடமும், "மளிகை சாமான்லாம் வாங்கிப் போட்டு, உடம்பு சரியில்லேன்னா டாக்டர்கிட்ட அழைச்சிட்டுப் போயி.." என்று ஒரு லிஸ்ட் அவரிடமும் இருக்கும்தான்!

நீங்கள் தப்புக் கணக்கு போடுவது இங்கேதான். சமைத்துப் போடுவதும், மார்க்கெட் போவதும் திருமண மான புதிதில் வேண்டுமானால், ஸ்பெஷல் கவனமாக உங்களின் துணைக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால், இந்த சில, பல வருஷங்களில்

இவையெல்லாமே உங்கள் தினசரி வேலையாகி விட்டதே! அப்படியெனில், கவனிப்பு என்பது.. அதன் அர்த்தமே வேறு!

ரமணன் படு பிஸியான ஆள்! காலையில் கம்பெனிக்குக் கிளம்பினால், வீடு திரும்ப தினமுமே ராத்திரியாகி விடும். பிள்ளைகள் இருவரும் தூங்கிய பிறகுதான், வீட்டுக்கு வருவான். அது என்னதான் ரிமோட் கன்ட்ரோலோ.. கணவனின் பைக் சத்தம் தெரு முனையில் வரும்போதே அடையாளம் தெரிந்துவிடும் ராணிக்கு. சட்டென்று எழுந்து சூடாக சப்பாத்தி போட தோசைக் கல்லை அடுப்பில் வைப்பாள்.

என்ன ஒரு அன்னியோன்யம்! கிண்டலும் கேலியுமாக ரமணனே ஒருமுறை அவளிடம் கேட்டான்..




“பதிவிரதை கேள்விப்பட்டிருக்கேன். நீ டெலிபதி விரதையா இருக்கியே.. அதெப்பிடி? நான் நினைக்குறதை எல்லாம் புரிஞ்சுக்கிட்டு அதை செஞ்சு முடிச்சுடுற.. ஆறு மணியானதும் ‘வெய்ட்டிங் ஃபார் யூ’னு எஸ்.எம்.எஸ் அனுப்புற.. வருஷம் எத்தனை ஆனாலும் புருஷன் மேல இருக்குற அக்கறையை அப்படியே வச்சிருக்க.. என் மேல அவ்ளோ லவ்வா?” என்பான் குறும்பு கொப்பளிக்க.

“ ‘என்னடா.. வீட்டுக்காரரை இன்னும் காணமே’னு காத்திருக்குறது தப்பா?” என்பாள் சிணுங்கலாக.

“தப்புனு யார் சொன்னா? எம் பொண்டாட்டி மாதிரி ஊர்ல யாரும் இல்லைனு நான் பெருமையடிச்சுக்கிட்டு திரியிறேன்..” என்று பேச்சில் ஐஸ்க்ரீம் கலப்பான் அவன்.

“அடேங்கப்பா! இவர் ஊர்ல இருக்குற எல்லார் வீட்டையும் எட்டிப் பார்த்துட்டு வந்த மாதிரி தான்..”

“போய்த்தான் பார்க்கணுமா? அவனவன் புலம்புவான்.. கேட்டிருக்கேனே.. வீட்டுக்குள்ள நுழைஞ்சது கூடத் தெரியாதாம். சீரியல் ஓடிக்கிட்டு இருக்குமாம். பசியோட போனாலும் ஒரு வாய்த் தண்ணி கொடுக்கக்கூட வொய்ஃப் எழுந்துக்க மாட்டாங் களாம்.. அதான் சொன்னேன்.. என் ராணி கிரேட்னு!”

இப்படித் தொடரும் இந்த இனிப்புப் பேச்சு!

இதுதான்.. இதுதான்.. அந்த கவனிப்பு!

காசு கொடுத்து ஒரு கலைப் பொருளை வாங்கி வருகிறோம்.. தினம் தினம் துடைத்து, அவ்வப்போது பாலிஷ் பண்ணி.. எத்தனை பத்திரப் படுத்துகிறோம்!

வீட்டை தினமும் பெருக்கி, துடைத்து, வாரம் ஒருமுறை தூசி தட்டி.. எப்படியெல்லாம் பாதுகாக்கிறோம்!




உயிரில்லாத இவற்றுக்கே தினசரி கவனம் தேவையாக இருக்கும்போது, இதயம் நுழைந்து, உயிரில் கலந்து வாழும் அந்த உறவுக்கும் உணர்வுக்கும் எப்பேர்ப்பட்ட அக்கறை தேவை!

“ஆனால், இந்தக் காலத்தில் பெரும் பாலான தம்பதிகள் தங்கள் துணை என்று எந்த சிறப்புக் கவனமுமே எடுப்பதில்லை. மற்ற எல்லா உறவு களைப் போல இதுவும் ‘இன்னொரு’ உறவு என்பதாகத் தான் கருதுகிறார்கள். அதுதான் அவர்கள் மனம் பிளவுபடுவதன் காரணம்..” என்கிறார், தம்பதிகள் பற்றிப் பல ஆய்வுகளை நடத்தியிருக்கும் அமெரிக்க புரொபஸர் ஜான் காட்மேன் என்பவர்.

மாதம் ஒருமுறையோ வாரம் ஒருமுறையோ அல்ல.. தினம் தினமுமே உங்களின் துணைக்காக, ஸ்பெஷலாக ஒரு விஷயத்தைச் செய்யுங்கள். “எனக்கு அதுக்கெல்லாம் நேரம் கிடையாதுங்க..” என்கிறீர்களா?

காந்தாரி கண்ணைக் கட்டிக் கொண்ட மாதிரியெல்லாம் உங்களை மெனக்கெடச் சொல்லவில்லை. சின்னச் சின்ன விஷயங்களில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அவ்வளவுதான்! ராணி செய்வது மாதிரி..

காலை பரபரப்பில் கிளம்பும் கணவனிடம், “மீட்டிங்னு சொன்னீங்களே.. யெல்லோ ஷர்ட்டை விட இந்த பிங்க் ஷர்ட் இன்னும் நல்லா இருக்கும்..” என்று எடுத்துத் தருவாள்.

திடுமென்று லஞ்ச் நேரத்தில் போன் பண்ணி, “சும்மா தான்.. உங்ககிட்ட பேசணும்போல இருந்தது..” என்பாள் - ஆத்மார்த்தமாக!

அதனால்தான் ஆயிரம் வேலைகளுக் கிடையிலும், ரமணனின் மனதுக்குள் எப்போதும் புன்னகைப் பூவாக இருக்கிறாள் ராணி. எத்தனைதான் டென்ஷனாக இருந்தாலும் அவள் தன்னைக் கவனிப்பதை, தனித்து கவனிப்பான் ரமணன். ஆகவேதான்.. என்றைக் காவது ஒரு நாள்.. ஒரே ஒருநாள்.. வேலை சீக்கிரம் முடிந்தால்கூட, அலுவலக நண்பர் களிடம் கதை அளந்து கொண்டு நேரத்தை வீணடிக்காமல், வீட்டுக்குப் பறந்து வந்து விடுவான்.. ராணி எஸ்.எம்.எஸ் கூட அனுப்பும் முன்னால்!

# ரொமான்ஸ் ரகசியங்கள்! - 2

## காதல் மொழி!

*திருமணங்கள் தோல்வியில் முடிவதன் காரணம்..*
*காதல் குறைபாடு அல்ல.. நட்புக் குறைபாடே!*

–ஃப்ரெடரிக் நீட்ஷே



**‘ரொ**மான்ஸ்’ என்கிற வார்த்தைக்கான முழு அர்த்தத்தையும் மொத்தமாகத் தருவது நமது சங்க இலக்கியம். தலைவனை போருக்கு அனுப்பி விட்டு, ‘அவன் எப்போதடா வீடு திரும்புவான்’ என்று ஏக்கத்துடன் காத்திருக்கும் தலைவியின் காதல் ரசம் பொங்கும் கவிதைகள்தான் அதில் பெரும்பாலும். அதில், ‘நெடுநல்வாடை’ என்றொரு இலக்கியம் உண்டு. அதற்கொரு அழகான அர்த்தமும் உண்டு!

போருக்குப் போயிருக்கும் தலைவன், மழைக் காலத்தில் வீடு திரும்புவதாக சொல்லியிருப்பான். அந்த மழைக் காலம் விரைவில் வரவிருப்பதை முன்கூட்டியே அறிவித்து போர்க்களத்திலிருக்கும் அவனை வீட்டுக்கு ‘பேக் - அப்’ பண்ணுவது, குளிரோடு சேர்த்து வீசும் வாடைக் காற்றுதானே! ஆக, அது அவனுக்கு ‘நல் வாடை!’

ஆனால், தலைவிக்கு..? தலைவன் இல்லாத நேரத்தில், அவன் ‘பிரிவை’ அதிகம் உணர்த்தி இம்சை கொடுப்பதும் அந்த வாடைக் காற்று தானே! ஆக, அது அவளுக்கு நெடும் சோகத்தைத் தரும் ‘நெடும்’ வாடை! இதுதான் ‘நெடு-நல்’வாடையின் ரொமான்டிக் அர்த்தம்!

அப்படி ஒரு ‘நெடுநல்வாடை’யாகத்தான் கல்யாணமான முதல் 15 தினங்களையும் உணர்ந்தாள் அமுதா. வேறென்ன செய்ய..? கல்யாணமான இரண்டாவது வாரமே சங்க காலத் தலைவன் போருக்குக் கிளம்பியதைப் போல, மார்க்கெட்டிங் வேலை விஷயமாக மும்பை கிளம்பிப் போய் விட்டான் கணேஷ். போனவன்.. 15 நாட்கள் கழித்துத்தான் ஊர் திரும்பினான்.

அதுவரை, அந்த அபார்ட்மென்ட் வீட்டுக்குள், காலிங்பெல்லை வெறித்துக் கொண்டே காத்திருந்தாள் அமுதா. அது செல்போன்கள் சிணுங்காத காலம்! வீட்டிலும் போன் கிடையாது. சாயந்திரம் ஆறு மணி வாக்கில் பக்கத்து வீட்டு டெலிபோன் அலறும்.. அவர்கள் வீட்டு டெலிபோன் என்றும் பாராமல் ‘அதை எடுங்களேன்..’ என்று கதவைத் தட்டி பதட்டப் படுவாள் அமுதா!

உண்மையிலேயே அது கணேஷின் அழைப்பாக இருந்துவிட்டால்.. ‘இன்றைக்கு ஒரு வழியாகப் போகிறோம்’ என்ற பயத்தோடுதான் அவள் காதுக்குப் போகும் டெலிபோன் ரிஸீவர்!



“உங்க தலையணை ரொம்ப மோசம்..” என்று அட்டகாசமாகத் தொடங்கும் நாம் கேட்கக் கூடாத அந்த ‘இனிய’ உரையாடல்!

மறுநாள் ஆறு மணி வரைக்கும் படுக்கையில் கண்களை மூடியபடி.. ஷவரில் நனைந்தபடி.. கிச்சனில் மிக்ஸியை சுற்ற விட்டபடி.. இப்படி படிப்படியாக நினைத்து சிலாகிக்க.. மனதுக்குள் ரீ-ப்ளே போட்டு சிலிர்க்க.. இந்த ‘ஸ்வீட் நத்திங்ஸ்’ மட்டுமே போதும் அமுதாவுக்கு.

கணேஷுக்கும் அப்படித்தான். மும்பையின் ஜுஹு பீச்சில் காலாற நடக்கையில்.. க்ளையன்ட்டைப் பார்க்க அதிகாலை ரயில் பிடிக்கையில், கூடவே கை கோர்த்துக் கொள்வாள் அவனது கற்பனை அமுதா!

ஊர் திரும்பவும் உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்ளவும் உயிர் உருகிக் காத்திருப்பார்கள் இருவரும்!

இப்போது.. கல்யாணமாகி எட்டு வருடங்கள் ஓடி விட்டன. நண்டும் சிண்டுமாக இரண்டு குழந்தைகளும் ஆகி விட்டன. சாதாரண ரெப்ரசன்ட்டேடிவாக இருந்த கணேஷ், இன்று ‘சவுத் ஸோன்’ மேனேஜர்.

இப்போதும் அப்படியேதான் இருக்கிறார்கள் அமுதாவும் கணேஷும். மும்பைக்கும் டெல்லிக்கும் ஓடிய கணேஷ், இப்போது நியூசிலாந்துக்கும் சிங்கப்பூருக்கும் பறக்கிறான்! அன்று பக்கத்து வீட்டு போன்.. இன்று இருவர் கைகளிலும் செல்போன்.

குழந்தை, ஸ்கூல் விசாரிப்புகள் முடிந்த பின், “சிங்கப்பூர் எப்பிடி இருக்கு தெரியுமா அம்மு? நாம எல்லாரும் ஒருதடவை வரணும். ஐ மிஸ் யூ எ லாட்!” என்பான்.

“நானும்தான்!” என்பாள். அதன் பின் அதே ‘ஸ்வீட் நத்திங்ஸ்’ தொடரும்.

“போதும்.. நேத்துத்தான் கல்யாணம் ஆன மாதிரி.. வருஷம் எட்டாச்சு.. ஞாபகம் இருக்குல்ல..?” - திடீர் ஞானம் பெற்றவளாக நடிப்பாள் அமுதா.

“எட்டு வருஷமா ஆகிடுச்சு? எனக்கென்னவோ நேத்துத்தான் பழனியில உங்க வீட்டுல வெச்சு நீ என்னை ‘எக்ஸ்க்யூஸ் மீ’னு எழுப்பின மாதிரி இருக்கு” என்பான் கணேஷ். அப்படியே பதினாறு வயதுப் பெண்ணாக முகம் சிவப்பாள் அமுதா.

ஆனால்.. இதையெல்லாம் தாண்டி, இருவருக்கும் இடையே காதலும் நேசமும் பெருகிக் கொண்டே போவதற்கு சொல்லாத காரணங்கள் ஆயிரம் உண்டு. அவற்றுள் முக்கிய காரணம் அமுதாவுக்கு கணேஷும், கணேஷுக்கு அமுதாவும் மிகச் சிறந்த நண்பர்களாக இருப்பது!



நமக்கான இடைவெளியில்
காற்றோடு அன்பையும் விதைத்த உனக்கு
என்னிடமிருந்து
என்ன வேண்டும் என்றேன்..
எதுவுமே வேண்டாம் என்றாய்
என் அழகான திருக்கிடலை
அன்பாக ரசித்தபடி..
பிறகுதான் சொன்னாய்,
உன்னைத்தவிர என்று!

- மருதம்.ஷப.கெஜலஷ்மி, கிருஷ்ணகிரி.

“அதென்னவோ தெரியல.. எந்த விஷயமானாலும் முதல்ல அவருக்குத்தான் போன் பண்ணிச் சொல்வேன். நான் படிச்சு ரசிச்ச கவிதையோ, டி.வி-யில பார்த்த காமெடியோ.. எதுவானாலும் ஷேர் பண்ணிக்க முதல் சாய்ஸ் அவர்தான்! அவரும் அப்படித்தான்..” என்பாள் அமுதா.

“ ‘எப்போதடா இருவரும் சேர்ந்து பேசிக் கொண்டிருப்போம்’ என்று காத்திருக்கிற தம்பதி களுக்கு எத்தனை வருடங்களானாலும் இளமை மாறுவதே இல்லை.. என்றென்றும் மார்க்கண்டேயர்கள்தான்!” என்கிறார்கள் மனவியல் நிபுணர்களும்!

அமுதாவும் கணேஷும்கூட மார்க் கண்டேயர்கள்தான்!

சுற்று வட்டாரத்தில், ‘சரியான பெண்டாட்டி தாசன்’ என்பார்கள் கணேஷை. ‘புருஷனுக்கு என்ன சொக்குப் பொடி போட்டாளோ’ என்பார்கள் அமுதாவை! புருஷனும் மனைவியும் நண்பர்களாக இருந்தால் அப்படித்தான் பெயர் கிடைக்கும் எனில்.. கிடைக்கட்டுமே! அப்படி யொரு நேச வாழ்க்கைக்குப் பெயர்தானே சொர்க்கம்!

# ரொமான்ஸ் ரகசியங்கள்! - 3



*'துன்பம் தொலைந்தது எப்போ?
காதல் பிறந்ததே அப்போ..
இன்பம் தொலைந்தது எப்போ?
கல்யாணம் முடிந்ததே அப்போ..'*

- தோல்வியில் முடியும் காதல் திருமணங்களின் வேதனைகளை விளக்கும் 'அலைபாயுதே' படப் பாடல் இது. பாடல் மட்டுமல்ல.. இன்று சமூகத்தில் அங்கங்கே நிஜமாகியிருக்கும் உண்மையும்கூட இது!

காதலாகி, கசிந்துருகி, தனிமையில் சிரித்து, காத்திருப்பை ரசித்து, கவிதைகள் கிறுக்கி, கனவிலேயே சஞ்சரித்து, 'டெடி பேர்'-க்கு அவன் பெயர் சூட்டி தழுவிக் கொள்ளும் சுகமான தவமல்லவா காதல்! ரத்த செல்களில் எல்லாம் காதலி குரலே ரிங்டோனாய் ஒலிக்க, அவளுக்கே அவளுக்காக அணுவணுவாகக் காத்திருக்கும் வேள்வியல்லவா காதல்! இத்தனை ஏக்கங்களும் நிஜமாகும் இன்பம்தானே காதல் திருமணம்! அது எப்படி வெறுத்துப்போய் விடுகிறது?

ஓவர் எக்ஸ்பெக்டேஷன் (அதீத எதிர்பார்ப்பு), மிஸ் அண்டர்ஸ்டாண்டிங் (புரிந்து கொள்ளாமை).. என்று காதல் திருமணம் தோல்வியில் முடிவதற்கு ஆயிரம் காரணங்களைப் பட்டியலிடலாம். காதலிக்கும்போது மட்டும் இதெல்லாம் இல்லையா?

இருந்தது..

"அந்த சுகன்யாவோட அரை மணி நேரம் போன்ல பேசியிருக்கே.. ராஸ்கல்!" - சண்டை வந்தது!

"எனக்குப் பிடிச்ச டிரஸ்ஸைப் போடுறதுக்குக்கூட எனக்கு உரிமை இல்லையா?" - விவாதம் எழுந்தது!

"என்னதான் பொல்லாத வேலையோ? ரெண்டு மணி நேரம் போன் பக்கத்துலயே உக்காந்திருந்தேன்.. ஏமாத்திட்டியே!" - அதிருப்தி இருந்தது.

இத்தனை இருந்தபோதிலும் அப்போது ஒரு விஷயம் இல்லை. அது.. அவர்கள் இருவருக்கே இருவருக்குமான தனிமை! காதலித்த காலத்தில் தனிமை அரிதாக இருந்தது! கிடைக்கும் சொற்ப நேரத்தை 'முழு'ப் பயனுள்ளதாக்க 'முக்கியமான'

விஷயங்கள் ஆயிரம் இருக்க, கண்டதையும் பேசி, சண்டை போட்டு ‘பொன்’னான மணித் துளிகளை ஏன் வீணாக்க வேண்டும்?

கல்யாணத்துக்குப் பிறகு.. மொத்த நேரமும் குத்தகைக்கு என்றான பிறகு..? சின்னச் சின்ன தீப்பொறிகளையும் தீண்டித் தீண்டி தீர்வு கண்டுவிடத் துடிக்கிறதே மனம்! பெரியவர்கள் என்னும் சமாதான ஸ்பெஷலிஸ்ட்டுகள் இல்லாமல் போகும் தனிக்குடித்தனங்களில், இந்தத் துயரத்தின் உயரம் ரொம்பவே அதிகம்! பெரியவர்கள் இருந்தால்.. அவர்கள் காதுவரை போகக் கூடாது என்பதற்காகவே சத்தம் எழுப்பாமல் சண்டையிட்டு, சமாதானமாகி விடுவார்கள். அவ்வளவு ஏன்.. பெரும்பாலும் சண்டை போடுவதற்குக் கூட நேரம் கிடைக்காமல் தவிக்கிற கூட்டுக் குடித்தன தம்பதிகள்தான் அதிகம்.. அபி - ஆனந்த்தைப் போல!

அலுவலகம் முடிந்து வீடு திரும்பும் ஆனந்த்தின் கண்களில் படவே மாட்டாள் அபி. அம்மாவின் கையால் காபி வாங்கிக் குடித்து விட்டு, உடை மாற்றும் சாக்கிலாவது அபியைக் கொஞ்சம் சீண்டலாம் என்று அறைக்குப் போனால், அங்கே மாமியாரும் மருமகளுமாக உட்கார்ந்து, உலர்ந்த துணிகளை மடித்துக் கொண்டே சீரியலை துவைத்துக் காயப் போட்டுக் கொண்டிருப்பார்கள்.

கைலியை மாற்றிக் கொண்டு டி.வி முன்னால் உட்காருபவன்தான்! நடுவில் “கேஸ் தீர்ந்து போய்டுச்சு..”, “தேங்கா உடைச்சுக் கொடுங்க..”, “மாம்பழம் வெட்டிக் குடுங்க..” என்றெல்லாம் அபி அழைத்தால், அதற்காகவே காத்திருப்பவன் மாதிரி ஆனந்தம் பொங்க ஓடி வருவான் கிச்சனுக்கு! குனிந்து கேஸ் மாற்றும் சாக்கில் அபியின் இடுப்பில் ஒரு கிள்ளு.. முடிந்தால் கேஸ்கட் கேப்பில் ஒரு முத்தம்..

அதற்குள், “கேஸை ஒழுங்கா மாட்டத் தெரியுதா அவனுக்கு..” என்றபடி அம்மா வரும் சத்தம் கேட்டு, “மாட்டியாச்சு.. மாட்டியாச்சு..” என்றபடி, நல்ல பிள்ளையாக முகத்தை வைத்துக் கொண்டு ஏதாவது பாடலை ‘ஹம்’ செய்தபடி ஹாலுக்கு நகர்ந்து விடுவான். அபிதான் பாவம்.. சிவந்து போன முகத்தையும் கிறங்கும் கண் களையும் மறைப்பதற்குள் படாதபாடு பட்டு விடுவாள்.

டி.வி பார்த்துக் கொண்டிருக்கும் கணவனை சாப்பிடக் கூப்பிடும் அபியை வேறொரு திசையிலிருந்து மாமனாரும் மாமியாரும் கவனித்துக் கொண்டு இருப்பார்கள்.. தான் மறைந்திருக்கும் தைரியத்தில் உதடு குவித்து ஒரு முத்தத் தைக் காற்றில் பறக்கவிட்டு, அவளைத் திடுக்கிட வைப்பான் ஆனந்த்.

இந்த அறியாச் சிறுமிக்கு
அனைத்தும் நீயாகவே இருக்கிறாய்..
நீ என்ன
என்னை கொள்ளை அடித்தவனா?
இல்லை சிறை மீட்டவனா?

- லசி

“சாப்பிடக் கூப்பிடுறாள்ல.. ‘வர்றேன்.. வரல’னு எதையாவது சொல்லேன்..” - சத்தம் வரும் அம்மா விடமிருந்து. அபியின் கண்களுக்குள் பார்த்துக் கொண்டே “வர்றேன்..” என்பான்.

வீட்டுப் பெரியவர்கள் இத்தனை யையும் கண்டும் காணாமலும் இருப் பார்கள். ராத்திரி பத்து மணிக்கு மேல் அபி கிச்சனில் எதையாவது உருட்டிக் கொண்டிருந்தால், அதே அம்மா சத்தம் போடுவார்..

“என்ன அபி.. இவ்ளோ நேரத்துக்கு மேல என்ன செய்துட்டிருக்கே? போய்ப் படு.. பாத்திரமெல்லாம் காலையில வெளக்கிக்கலாம்..”

நல்லதொரு கூட்டுக் குடும்பம் சொர்க்கம்!

அரிதாகக் கிடைக்கும் எந்தவொரு விஷயமுமே அதன் முழுப் பயனை அடைந்து விடும். கூட்டுக் குடும்பத்தில் தனிமை அரிது! அதனாலேயே அது விலை யற்ற பொக்கிஷமாகி விடுகிறது.

எவ்வளவு தண்ணீரையும் தனக்குள் உறிஞ்சக் காத்திருக்கும் நிலம் மாதிரி.. காதலின் அருமை தெரிந்து வாழ்கிறார்கள் நல்ல கூட்டுக் குடும்பங்களை இன்னும் காப்பாற்றி வருகிறவர்கள்!

# ரொமான்ஸ் ரகசியங்கள்! - 4



மத்தியான நேரம்.. சரியாக லஞ்ச் பாக்ஸைத் திறக்கும் சமயத்தில் 'பீப் பீப்' என்று கூவுகிறது மொபைல் போன். வந்திருப்பது எஸ்.எம்.எஸ்.

'யாரிடமிருந்து..' - அசுவாரஸ்யத்துடன் மொபைலை எடுத்துப் பார்க்கிறான் சுரேஷ். இதய வடிவ சிம்பல்களுடன் அவன் மனைவி பானு!

"கனவுகள் எப்போது வருவதில்லை?" அவ்வளவுதான் மெசேஜ்!

சாப்பிடும் நேரம் முழுக்க யோசித்தான். உடன் வேலை பார்க்கிறவர்களிடம் சும்மா பேச்சுவாக்கில் தொடங்குவது போல, தானே கனவு பற்றிய பேச்சைத் தொடங்கி, "வரதராஜன் சார்! தினம் கனவு வரும்னு சொல்ல முடியாதுல்ல.. எப்போ வெல்லாம் கனவு வராது?" என்று கேட்டுப் பார்த்தான்.



ம்ஹூம்.. சரியான பதில் கிடைக்கவில்லை. தோல்வியை ஒப்புக்கொண்டு மனைவிக்கே போன் பண்ணி விடலாம் என்று நினைக்கும் நேரத்தில் மீண்டும் 'பீப்.. பீப்..'

"கண்ணில் ஒரு வலி இருந்தால் கனவுகள் வருவதில்லை.. இதை நான் சொல்லல.. வைரமுத்து சொல்லியிருக்கார், 'உயிரே' படப் பாட்டுல! உனக்கு இப்போ கனவே வராதே.. கண் வலி எப்படி இருக்கு டியர்?"

அவ்வளவுதான்! பரபரவென்று போன் போட்டான் மனைவிக்கு. அடுத்து அவர்கள் பேசிய வார்த்தைகளுக்குள்.. (அல்லது பேசாத வார்த்தைகளுக்குள்?!) நாம் மூக்கை நுழைப்பது நாகரிகம் அல்ல. ஆனால், அந்த ஒரு சின்ன எஸ்.எம்.எஸ்-தான் அவர்களின் அன்றைய தினத்தை மட்டுமல்ல.. அடுத்து வந்த மாதம் முழுவதையுமே ரொமான்ஸ் குறையாமல் வைத்திருந்தது.

வாழ்க்கையை சுவாரஸ்யப்படுத்த இதுபோன்ற சின்னச் சின்ன 'ஆர்வங்களும்' 'மெனக்கெடுதல்'களும் அவசியம்! 'கண் வலி எப்படி இருக்கு?' என்றுகூட மெசேஜ் அனுப்பலாம்தான். ஆனால், அதை விடவும் இந்த விதம், உங்கள் துணையை நினைத்து நினைத்துப் பூரிக்க வைக்குமே.. இதயம் முழுக்க உங்களை நிரப்பி, மாலை எப்போது ஆகும் என்று காத்திருக்க வைக்குமே!

மாலா உடையிலும் தோற்றத்திலும் வித்தியாசம் காட்டுவாள். எப்போதும் சாயம் போய், தொடைப் பகுதிகளில் மட்டும் நிரந்தர அழுக்கு பிடித்த நைட்டி போட்டிருப்பவள், திடீரென ஒரு மாலையில் பளிச் புடவையில் ஜொலிப்பாள்.



அலுப்புடன் வீட்டினுள் நுழைகிற அவள் கணவன் செல்வம், சட்டென உற்சாகமாவான்.

திடீரென்று எதையாவது அரைத்து, முகத்தில் பூசி, அரை மணி நேரம் ஊறவைத்து கழுவி, 'செல்வம் ஏதாவது வித்தியாசம் கண்டுபிடிக்கிறானா' என்கிற ஆர்வத்துடன் நிற்பாள்.

கண்டுபிடித்தால் சந்தோஷம்! கண்டுபிடிக்கவில்லையெனில்.. அதிக சந்தோஷம்!

"முகத்துக்கு வெள்ளரிக்காய் அரைச்சுப் போட்டேன். என்னோட ஸ்கின் எவ்ளோ ஸாஃப்ட் ஆகிடுச்சு.. பார்த்தீங்களா?" என்று கணவனின் கைகளை எடுத்து, தன் கன்னத்தில் வைத்துப் பார்ப்பாள்..

அவனும் அப்படித்தான்! ஒருநாள் 'ஃப்ரெஞ்ச் பியர்ட்'-ல் கண் சிமிட்டுவான். இன்னொரு நாள் மீசையே இல்லாமல் 'மழுமழு' முகத்துடன் நிற்பான். "ச்சீ.. நல்லாவே இல்ல.." என்று சும்மாவேனும் சொல்லுவாளே தவிர, மாலாவுக்கு அவன் என்ன செய்தாலும் பிடிக்கும்!

போதுமே!

உங்களுக்குப் பழக்கப்பட்ட உங்களுடைய வீடுதான்.. எப்போதும் எதிர் எதிர் பக்கம் ட்யூப் லைட் போட்டு பிரகாசமாகத்தான் வைத்திருப்பீர்கள். ஆனால், திடீரென்று 'பவர் கட்' ஆகி, ஒரே ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைக்கும்போது அதே வீட்டின் அழகு இன்னும் ரம்மியமாக.. அதுவரை நீங்கள் ரசிக்காத கோணத்தில் மிளிரும்தானே!

அப்படித்தான் வாழ்க்கையும். சின்னச் சின்ன மாற்றங்களும் வித்தியாசங்களும்தான் அதை போரடிக்காமல் பார்த்துக் கொண்டிருக்கின்றன.இல்லறத்துக்குப் புத்துயிர் தருகின்றன. தினம் தினம் புதிதாய் வாழ்வோமே!



# ரொமான்ஸ் ரகசியங்கள்! - 5



**வா**ழ்க்கையை சந்தோஷங்கள் பொங்கி வழியும் நீரூற்றாக வைத்திருப்பதும் பெரும் துயரங்கள் சூழ்ந்த துன்பக் கடலாக மாற்றுவதும் எது சொல்லுங்கள்.. வேறெதுவுமே இல்லை. வார்த்தைகள்தான்!

வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தைகள் காயப்பட்ட மனதுக்கு மருந்தாகவும் இருக்கும். சில நேரம் அதே மனதைக் குத்திக் கிழிக்கும் ஆயுதமாகவும் அவதாரம் எடுத்துவிடும்.

மனோவுக்கும் அஞ்சுவுக்கும் திருமணமாகி எட்டு மாதங்கள்தான் ஆகிறது. ஆனால், சதா சண்டை! எந்த விஷயத்தை ஆரம்பித்தாலும் அது எப்படி எப்படியோ புரிந்து கொள்ளப்பட்டு, தாறுமாறாகப் பயணித்து, விவாதமாகி, விதண்டாவாதமாகி ஒருவரை ஒருவர் எவ்வளவு முடியுமோ அவ்வளவு காயப்படுத்தி, ஆறாத ரணமாகத்தான் முடியும். 'இப்படி எலியும் பூனையுமாக சண்டையிட்டுக் கொண்டே இருப்பதற்கு பேசாமல் டைவர்ஸ் பண்ணிக் கொண்டால் என்ன..' என்று இருவருமே யோசிக்கத் துவங்கியிருந்த நேரம் அது!

நல்லவேளையாக அந்த நேரத்தில் மனோவின் அத்தை ஒருவர் அவர்கள் வீட்டுக்குப் போனார். அனுபவசாலி இல்லையா? ஒன்றுமே இல்லாத சின்ன சின்ன விஷயங்களை எல்லாம் இவர்கள் பூதக் கண்ணாடி.. இல்லையில்லை, மைக்ரோஸ்கோப்பால் பார்க்கிறார்கள் என்று வந்தவுடனே கண்டுபிடித்துவிட்டார் அவர்.

அஞ்சு சொன்னாள்..

“ஆன்ட்டி.. எங்களுக்குள்ள எதுவுமே பொருந்தலை. எனக்கு எப்பவும் லைட் கலர்ஸ்தான் பிடிக்கும். மனோவோட சாய்ஸ் ஆரஞ்சு, மஞ்சள்னு அடிக்கிற கலர்ஸ்! 'பீச்சுக்குப் போலாமா?'னு கேட்டா, ஒரு நாள்.. ஒரே ஒரு நாள் கூட மனோ சரினு சொன்னதில்ல..” என்று இவள் முடிக்கும் முன் மனோ தொடங்கினான்..




“ஆமா.. கண்டவனும் எச்சி துப்பி, பாட்டில் உடைச்சுப் போட்டிருப்பான்.. அந்த மண்ணுல போய் உக்காரணும்ங்கிறா அத்தை! கொஞ்சம்கூட சுத்தமே கிடையாது! வீட்டை எப்பிடி வெச்சிருக்கா பாருங்க..”

“ஆமா! உங்க சுத்தத்தைப் பத்தி எங்களுக்குத் தெரியாதா..”

தன் முன்னாலேயே ஒரு சண்டை உருவாவதை விரும்பாமல்தான் அவர்களின் பேச்சுக்கு அப்படியே முற்றுப் புள்ளி வைத்தார் அத்தை..

“முதல்ல நீங்க ரெண்டு பேரும் இப்படி பதிலுக்குப் பதில் பேசுறதை நிறுத்தணும். இல்லேன்னா, நான் கிளம்புறேன். நீங்க சண்டை போடுங்க!” என்று அவர் ஒரு போடு போட்டதில் அமைதியானார்கள் இருவரும்.

இருவரிடமும் அத்தை நிறையப் பேசினார். அஞ்சு, வீட்டுக்கு ஒரே பெண். மிகவும் செல்லமாக வளர்ந்தவள். அம்மா வீட்டில் அவள் வைத்ததுதான் சட்டம். அவள் அப்பாவின் மீசைகூட அவளுக்குப் பிடித்த ஸ்டைலில் தான் இருக்கும். மனோ வளர்ந்ததும் அப்படித்தான். சொல்லப் போனால், இப்படி வேற்றுமைகள் எழக் காரணமே அந்த ஒற்றுமைதான்.

ஆனால், அத்தனை வேற்றுமைகளையும் தாண்டி, அவர்களுக்கே தெரியாமல் எக்கச்சக்க அன்பும் இழையோடியது. அதைக் கண்டுபிடித்தார் அத்தை!

“வாவ்! ரவாலாடு செஞ்சு கொண்டு வந்தீங்களா ஆன்ட்டி.. மனோவுக்கு ரொம்பப் பிடிக்கும்” என்று அத்தை கையில் இருந்து பார்சலை வாங்கியதுமே பரவசப்பட்டாள் அஞ்சு.

“இந்த டெலிபோன் மேட் நல்லாயிருக்கே!” என்று அத்தை அதைக் கையில் எடுத்துப் பார்த்தபோது “அஞ்சு பின்னினது அத்தை! நிறைய ஹேண்ட் வொர்க் செய்வா..” என்று பெருமையில் பொங்கி வழிந்தான் மனோ.

ஆக, இருவருக்கும் ஒருவர் மேல் மற்றவருக்கு அன்பு இருக்கிறது. அக்கறை இருக்கிறது. காதல் இருக்கிறது. மோதலும் இருக்கிறது. மோதலை ஊடலாக்கி ஜாலி பண்ணத் தெரியாமல் வார்த்தைகளை விட்டு, வலியை வாங்கி.. சேச்சே, இருவரின் அசட்டுத்தனத்தையும் நினைத்து தலையில் அடித்துக் கொண்டார் அத்தை.

இரு வேறுபட்ட மனிதர்கள் வாழ்க்கையில் இணையும்போது அவர்களின் சிந்தனை செயல் எல்லாம் ஒரே மாதிரி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படி இருந்தால் அந்த வாழ்க்கை சுவாரஸ்யமாகவும் இருக்காது என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொன்னார்.

“நீ எப்படி ஒரு தனி மனுஷனோ, உனக்கு தனிப்பட்ட விருப்பு வெறுப்பு இருக்கோ அப்படித்தான் அவளுக்கும் இருக்கும். உன் பார்வையில நீ செய்றதெல்லாம் சரினு




தோணலாம். ஆனா, அவளுக்கு அது தப்பாப் படுதே! எந்த ஒரு விஷயத்துல கருத்து வேறுபாடு வந்தாலும் 'எது சரி'னு அமைதியா கலந்து பேசுங்க. 'நான்தான் சரி'னு விவாதம் பண்ணாதீங்க!

இத்தனை நாளும் ஒருத்தருக்கான வாழ்க்கையை வாழ்ந்தீங்க. உங்களுக்குப் பிடிச்ச விஷயங்களை மட்டும்தான் ரசிச்சிருப்பீங்க. ஆனா, உங்க துணைக்குப் பிடிச்ச பல நல்ல விஷயங்களையும் தெரிஞ்சுக்கிட்டு ரசிக்கலாமே.. உலகத்தைப் புதுசா பார்க்குற குழந்தை மாதிரி ஆர்வத்தோட இருந்தீங்கனா இந்த மாதிரி சின்னச் சின்ன விஷயங்கள்லாம் உங்களை சந்தோஷப்படுத்துமே தவிர, சங்கடப்படுத்தாது"

- என்றெல்லாம் அவர் பேசிய வார்த்தைகள் இருவர் மனதிலுமே பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. விவாதங்களின் இடத்தை ஆரோக்கியமான கலந்துரையாடல்கள் எடுத்துக் கொண்டன.

சனிக்கிழமை எப்போது வரும் என்று காத்திருந்து மனோ வாங்கித் தந்திருந்த ஆரஞ்சு - மஞ்சள் காம்பினேஷன் புடவையை உடுத்தினாள் அஞ்சு. அவளை கண்களால் விழுங்கின மனோ, அவளை பீச்சுக்கு அழைத்துப் போனான். அங்கு டவல் விரித்து அமர்ந்து, நட்சத்திரங்களை எண்ணி, "அந்த ஸ்டார்ஸை எல்லாம் விட என்னோட ஸ்டார்தான் ரொம்ப அழகு!" என்று அஞ்சுவை முகம் சிவக்க வைத்து, பீச்சே காலியான பிறகு, மனமின்றி எழுந்து, ஹோட்டலில் டின்னர் முடித்து, பில்லியனில் ஏறி அமர்ந்தவளின் பிரேஸ்லெட் கரத்தை எடுத்து, தன் இடுப்பைச் சுற்றி வைத்து, வீடு திறந்து, அவளைத் தன்னோடு சேர்த்து இறுக்கிக் கொண்டவன், அவள் காதில் சொன் னான்..

"ச்சே! இவ்ளோ நாளை வீணாக்கிட்டோமே!"

# ரொமான்ஸ் ரகசியங்கள்! - 6



இருபத்திரண்டு ஆண்டு கால திருமண வாழ்க்கை ரொம்பவே அலுத்துத்தான் போயிருந்தது பால்ராஜ் - லலிதா தம்பதிக்கு! கிராமமும் இல்லாத, நகரமும் இல்லாத ரெண்டும் கெட்டான் ஊரில் வாழ்க்கை! பிள்ளைகள் இருவரையும் நல்ல பள்ளி, கல்லூரி வேண்டி வெளியூரில் ஹாஸ்டலில் சேர்த்தாகி விட்டது. அலுவலகம் முடிந்து வீட்டுக்கு வந்தால் டி.வி! சீரியல்கள், போட்டி நடனங்கள், பிரேக்கிங் நியூஸ் என்று எத்தனை நேரம்தான் அந்த எலெக்ட்ரானிக் சாதனத்தின் முன் உட்கார்ந்திருப்பது? ச்சீயென்று போய்விடும் பால்ராஜுக்கு.

லலிதாவுக்கும் அப்படித்தான். கொஞ்ச நேரம் பக்கத்து வீட்டுப் பெண்மணியுடன் பேசுவாள். பிள்ளைகள் வீட்டில் இருந்தாலாவது வித்தியாசமாக சமைக்கலாம். கணவனுக்கு பிரஷரும் தனக்கு ஷுகரும் நிரந்தர விருந்தாளிகளாக வீற்றிருப்பதால், உணவில் ஏகப்பட்ட கட்டுப்பாடுகள்.

வழக்கம்போல அசுவாரஸ்யத்துடன் விடிந்த ஒரு ஞாயிற்றுக்கிழமையில்தான் கல்யாண அழைப்பிதழுடன் வந்தான் ரகு. தூரத்து உறவுக்காரப் பையன்.

“அத்தையையும் கண்டிப்பா கூட்டிட்டு வரணும் மாமா..” என்று பத்து தடவையாவது சொல்லி இருப்பான்.

கல்யாணம் போன்ற விசேஷ வீடுகளுக்கு லலிதாவை அழைத்துச் செல்ல வேண்டும் என்று பலமுறை நினைத்திருக்கிறார் பால்ராஜ். ஆனால், பெரும்பாலும் திருமணங்கள் அவர் அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பும் வழியில் உள்ள நகரத்து திருமண மண்டபங்களில் நடப்பதால், அவ்வளவு தூரம் வீட்டுக்குப் போய் லலிதாவை அழைத்து வர வேண்டுமே என்கிற நினைப்பே அவரை களைப்பாக்கி விடும். அதனால், அவர் மட்டும் கலந்து கொள்வதே வழக்கமாகிப் போயிருந்தது.

ரகுவின் கல்யாணம் நடக்கும் மண்டபம் வீட்டிலிருந்து சில கிலோமீட்டர்கள் தொலைவே இருந்ததும், அவன் அத்தனை முறை வற்புறுத்தி அழைத்ததும் நினைவுக்கு வரவே பைக்கில் கிளம்பினார்கள். பட்டுப் புடவை சரசரக்க மனைவி தன் பின்னே உட்கார்ந்து வந்த அந்த அனுபவம், பால்ராஜை பல வருடங்கள் பின்னே இழுத்துச் சென்றது. கல்யாணமான புதிதில் தாங்கள் இருவரும் சேர்ந்து போன கல்யாணங்கள்.. உறவினர் வீடுகள்.. சினிமாக்கள்.. அப்போது அவர் ஒரு மொபெட் மட்டுமே வைத்திருந் தார். ஆனால்.. ஆகாய விமானம் ஈடாகுமா அந்த சொகுசுப் பயணத்துக்கு!

ஞாயிற்றுக்கிழமையாகி விட்டால், வீடு தங்கப் பிடிக்காது இருவருக்கும். காலை டிபனை வீட்டில் முடித்து, மத்தியானம் டவுனில் நூன் ஷோ பார்த்து விட்டு, ஹோட்டலில் லஞ்ச். அப்படியே கடைகளுக்குப் போய் காய்கறி முதல் பொம்மை செய்வதற்கு தேவைப்படும் உல்லன் நூல் வரை பர்சேஸ்.. அடடா.. அந்த நாட்களில் லலிதா என்ன அழகாக பொம்மைகள் செய்வாள்!




“லல்லி.. முன்னாடி செய்வியே.. அந்த பொம்மையை எல்லாம் இப்ப நீ செய்றதே இல்லையே.. ஏன்?” என்று அவர் கேட்க, கணவரின் திடீர்க் கேள்வியில் நெற்றி சுருக்கினாள் லலிதா.

“என்னாச்சு திடீர்னு..?”

“இல்ல.. முன்னாடியெல்லாம்.. கல்யாணமான புதுசுல நாம வாராவாரம் டவுனுக்குப் போவோம்ல.. அது ஞாபகம் வந்தது. கேட்டேன்..”

“டவுனுக்குப் போறது மட்டுமா? ரெண்டு பேருமா சேர்ந்து இதுமாதிரி எத்தனை கல்யாண வீட்டுக்குப் போயிருக்கோம்..” என்னும் போதே வெட்கம் லலிதாவை ஆட்கொண்டது. மண்டபங்களில் உட்கார்ந்து கொண்டு தங்களின் திருமண தினத்தை மனசுக்குள் ‘ரீப்ளே’வாக ஓட விடுவதே இருவருக்கும் முக்கியமான பொழுதுபோக்காக இருந்தது அப்போது.

ஒரு கல்யாணத்தில் வைத்துக் கேட்டாள்.. “என் கழுத்துல தாலி கட்டும்போது அவ்ளோ டென்ஷனா இருந்தீங்களே.. ஏன்?”

“நீ வேற.. முன்ன பின்ன வேஷ்டி கட்டிப் பழக்கம் இல்ல. ஊரே உக்காந்திருக்க, மானம் போய்டுமோனு நான் பயந்துபோய் வேஷ்டியப் பிடிச்சுக்கிட்டே இருந்தேன்” என்று அவர் சொன்னதும்.. தான் விழுந்து விழுந்து சிரித்ததும்.. வேஷ்டியைப் பிடித்திருப்பது போல ஒரு புகைப்படம் கூட ஆல்பத்தில் இருப்பதும் இப்போதும் நினைவுக்கு வந்து புன்னகைக்க வைத்தது அவளை.

மண்டபப் படிகளில் ஏறிக் கொண்டே கேட்டார் பால்ராஜ்.. “என்ன சிரிப்பு..?”

“இல்ல.. உங்க வேஷ்டியை நினைச்சேன்.. அதான்!” என்று சொல்ல இருவரும் சேர்ந்தே சிரித்தார்கள்.

அன்று மட்டும் கணக்கற்ற தடவைகள் லலிதாவின் முகம் சிவந்தது வெட்கத்தில். பால்ராஜுக்கு மட்டும்..? அவர் உடல்தான் மண்டபத்தில் இருந்ததே தவிர, மனம் இருபத்து இரண்டு வருடம் பின்னோக்கி அவர்களின் திருமண தினத்துக்கே போய்விட்டது. உள்ளுக்குள்ளிருந்து கிளம்பிய மெல்லிய குறுகுறுப்புடன் தற்செயலாகப் பார்ப்பது போலத் திரும்பி மனைவியைப் பார்த்தார்.. கண்களின் கீழே விழுந்திருந்த கருவளையமும் முன் நெற்றி நரையும் தவிர வேறு பெரிய மாற்றங்கள் இல்லை லலிதாவிடம். ‘லல்லி அப்பிடியேதான் இருக்கா..’ மனதுக்குள் சொல்லிக் கொண்டார்.

அதை லலிதா கவனிக்காமல் இருப்பாளா? தொண்டையைச் செருமினாள்.. “யாராவது பார்த்தா என்ன நினைப்பாங்க? மேடையைப் பாருங்க!” சொன்னாளே தவிர முகம் முழுக்கப் பூரித்துப் போயிருந்தது.

“அத்தையையும் கூட்டிட்டு வந்ததுக்கு ரொம்ப தேங்க்ஸ் மாமா..” என்று ரகு நெகிழ, ‘நானில்ல உனக்கு தேங்க்ஸ் சொல்லணும்’ என்று வாய்வரை வந்ததை நிறுத்தி புன்னகைத்தார் பால்ராஜ்.


ரகுவின் கல்யாண தினம் அவர்கள் வாழ்வின் மறக்க முடியாத அற்புத தினமாக மாறிப் போனதென்னவோ உண்மை! கடந்த காலம் பற்றிய சந்தோஷ நினைவுகள் நம்மை அந்தப் பருவத்துக்கே மீண்டும் அழைத்துச் செல்ல வல்லவை. திருவிழா சந்தையில் சுரண்டியும் வளைத்தும் பார்த்து வாங்கிய வளையல்களையும், குழந்தைப் பருவத்து குடை ராட்டினக் குதூகலத்தையும் பற்றி நினைத்துப் பார்க்கையில் அந்த நாட்களுக்கே போய் ஆனந்தக் கூத்தாடுகிறது மனம்.

அப்படித்தான், திருமணமான ஆரம்ப தினங்களை மனதுக்குள் ஓட்டிப் பார்ப்பதும் அந்த ரொமான்டிக் ஞாபகங்களுக்கு மீண்டும் அழைத்துச் செல்லும்.

துணையைப் பற்றி பெரிதாகத் தெரிந்திராத அந்த நாட்கள் எத்தனை சுவாரஸ்யமாக இருந்தன! இன்னும் இன்னும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற வேட்கையும் விழைவும் எத்தனை வேகம் பெற்றிருந்தன. ஒவ்வொரு நிமிடமும் அர்த்தம் பொதிந்ததாய்.. ஒவ்வொரு தினமும் புத்தம் புதிதாய்.. ஒவ்வொரு காத்திருப்பும் சுகமான சுமையாய்.. ஒவ்வொரு காலையும் ஏன்.. சில மாலைகளுமே வெட்கம் பூசினதாய்.. எண்ணி எண்ணிப் பூரிக்க எண்ணிலடங்காத ஞாபகங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கின்றதுதானே!

அதிலும் ‘ஃபாஸ்ட் ஃபுட்’ போலவே சேர்தலிலும் பிரிதலிலும் வேகம் ஏறித் திரியும் இந்தக் காலத்தில் பிறக்காததாலேயே, அதிக பரிசுத்தமும் பேரன்பும் கொண்டு விளங்கும் பாக்கியம் பெற்றவர்கள் அல்லவா இன்றைய நடுத்தர வயதுக்கு மேற்பட்ட தம்பதியர்! அப்படி இருக்க, அலுப்புக்கும் சலிப்புக்கும் அங்கு இடம் எதற்கு?

பால்ராஜையும் லலிதாவையும்போல இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கலாமே.. ஒவ்வொருவரும்!



# ரொமான்ஸ் ரகசியங்கள்! - 7



**‘ம**கிழ்ச்சியும் அன்னியோன்யமுமாக வளைய வரும் தம்பதிகள், மனச் சோர்வுக்கோ உடல் சுகவீனத்துக்கோ ஆட்படுவது குறைவு. அதே சமயம், துணையிடமே எந்நேரமும் போராட வேண்டியிருப்பவர்களிடம் உடல் மற்றும் மன ரீதியிலான பல பிரச்னைகளும் நிரந்தரமாக சம்மண மிட்டு உட்கார்ந்து கொள்கின்றன’.

- அமெரிக்காவின் ‘நேஷனல் சென்டர் ஃபார் ஹெல்த் ஸ்டேடிஸ்டிக்ஸ்’ என்கிற அமைப்பு வெளியிட்டிருக்கும் தகவல் இது!

விவாகரத்துக்களின் எண்ணிக்கையும் திருமணம் செய்யாமலே சேர்ந்து வாழ்கிற ‘லிவிங் டுகெதர்’ கலாசாரமும் அதிகமுள்ள அமெரிக்கா போன்ற நாடுகளே சமீப காலமாக ‘திருமண வாழ்வின் மகத்துவம்’ பற்றிப் பேச ஆரம்பித்திருக்கின்றன.

“இன்னும் சொல்லப் போனால், இன்றைய அமெரிக்கர்கள் பலரின் லட்சியமே வெற்றிகரமான மணவாழ்க்கையாகத்தான் இருக்கிறது. முதல் திருமணம் முறியும்போது அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதவர்கள்கூட, அடுத்த திருமண பந்தத்துக்குள் நுழையும்போது ‘இதுவும் தோற்று விடக் கூடாதே’ என்று பயப்படுகிறார்கள். சின்னதாக ஒரு பிரச்னை என்றாலும் பயந்துபோய் எங்களை நாடி வருகிறார்கள்..” என்கிறார்கள் அங்குள்ள திருமண கவுன்சிலர்கள்.

ஆனால், நம் ஊரில் பல இளைஞர் - இளைஞிகளும் அமெரிக்காவை அடியொற்றி தொட்டதற்கெல்லாம் கோர்ட்டுப் படியேறத் தொடங்கி விட்டார்கள்.

‘சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் ஒரு நாளில் மட்டும் 30 விவாகரத்து கேஸ்கள் ஃபைலாகின்றன’ என்கிற வேதனைத் தகவலைச் சொன்னார் ஒரு வக்கீல் தோழி!




ஐ.டி. கம்பெனி வேலை, லட்சங்களைத் தொடப்பார்க்கும் சம்பளம்.. என்றிருக்கும் இளசுகள் பலரும், ‘டைவர்ஸ்’ என்பதை ஏதோ ஒரு மேஜிக் வார்த்தையாக.. குடும்பம் என்ற தொல்லையிலிருந்து தங்களை விடுவிக்கும் பெரும் சுதந்திரமாகவே பார்க்கிறார்கள்.

பணம் பணம் என்று ஓடி ஓடிக் களைத்து ஏதோ ஒரு நாளில் சக்தியின்றி சோர்ந்து விழும்போது, மனசுக் காக மட்டும் தன்னை நேசிக்கிற.. தன்னையே சுவாசிக்கிற.. ஒரு துணை இல்லாமல் போனால் என்னவாகும் ஒவ்வொருவரின் நிலையும்? நகரங்களில் வாழும் இளைய சமுதாயத்துக்கு இதெல்லாம் புரிந்தால்தானே..!

ராஜி-வினோத்தின் வாழ்க்கையே இதற்கு பெரிய உதாரணம்.

காதல் மணம் புரிந்தவர்கள்தான்.. இருவருமே கை நிறைய சம்பாதிக்கிறவர்களும்கூட! ஆனால், வீட்டின் பண விவகாரங்களை முழுவதுமாக கவனித்துக் கொள்வது வினோத்தான். திருமணமான புதிதில் ராஜிக்கு அதில் எந்த சங்கடமும் இல்லை. ஆனால், நாட்கள் நகர நகரத்தான் நாக்கில் அமர்ந்து கொள்கிறதே சாத்தான்!

ஒரு மாலை நேரத்தில் ராஜி அலுவலகத்திலிருந்து கார் நிறைய பிளாஸ்டிக் பைகளுடன் வந்தாள். அத்தனையும் புத்தம் புதிதான உடைகள்.

“ ‘சேல்’ல வாங்கினேன்.. என்ன சீப் தெரியுமா?” என்று அவள் சோபாவின் மீது போட்ட உடைகளை விடவும் அவற்றின் அடியில் இருந்த பில்லின் மீதுதான் வினோத்தின் கவனம் சென்றது.

“ஹப்பா.. அஞ்சாயிரம் ரூபாய்க்கா டிரஸ் வாங்குவே? திஸ் இஸ் டூ மச்!” என்றான் கோபத்துடன். தன்னிடம் நட்பு ரீதியாகக் கூட ‘வாங்கட்டுமா?’ என்று அவள் கேட்காதது மனதுக்குள் கொதிக்க, அவன் முகம் ஜிவுஜிவுத்தது.

‘சரி.. ஏதோ டென்ஷனாகி விட்டான்’ என்று ராஜி அப்போதைக்கு வாய் மூடி மௌனமாகி இருந்திருந்தால், பிரச்னையே இல்லை.

“எது டூ மச்? நீங்க போன மாசம் லேப்டாப் வாங்கினீங்களே.. அது டூ மச் இல்லையா? ரெண்டாயிரம் ரூபாய்க்கு ஷூ வாங்கினீங்களே.. அது டூ மச் இல்லையா? நீங்க எப்படி வேலை பார்க்கறீங்களோ அப்படித்தான் நானும் வேலை பார்க்கிறேன்.. சம்பாதிக் கிறேன்.. என்னோட சம்பாத்தியத்துலருந்து நாலு டிரஸ் வாங்குறதுக்குக்கூட எனக்கு உரிமை இல்லையா?” என்று போர்க்கொடி உயர்த்தினாள்.

இப்போது வினோத்தின் முறை. அவனும்தான் ராஜிக்கு சளைத்தவன் இல்லையே! சும்மா விடுவானா? 'இதை இன்னிக்கு ஒரு கை பார்த்துடுறது' என்கிற முடிவோடு ஃபுல் ஹாண்ட் ஷர்ட்டை மடித்துவிட்டுக் கொண்டான் அவன்.

அதன் பிறகு அவர்களின் சண்டை போன விதம்.. அதை நீங்கள் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில், பல சமயங்களிலும் எதையெல்லாம் செய்யலாம் என்பது தெரியாமல் போனால் கூடப் பரவா யில்லை. எதையெல்லாம் செய்யக் கூடாது என்பது கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும்.

# ரொமான்ஸ் ரகசியங்கள்!-8




**சா**தாரணமாக புருஷன் - பெஞ்சாதிக்குள் எழும் சண்டைதான் வினோத்துக்கும் ராஜிக்கும் இடையே எழுந்ததும்! மெழுகுவத்தி ஊதினால் அணைந்து போகும்.. அடுப்புத் தீ ஊத ஊத பெரிதாகத்தானே செய்யும்? அடுப்பாகத்தான் புகைந்தது அவர்களின் பூசலும். அதில் உலையாகக் கொதித்தது உயிர்க் காதல்!

"என்னோட சம்பளத்துல நாலு டிரஸ் வாங்கக்கூட எனக்கு உரிமை இல்லையா?" என்று ராஜி கேட்க, வினோத் உதடு துடிக்கச் சொன்னான்.

"நாலு டிரஸ்ஸா? இந்த ரெண்டு மாசத்துல மட்டும் நீ நாப்பது டிரஸ் வாங்கியிருப்ப.. அது மட்டுமா? போன மாசம் உங்கம்மாவுக்குப் பிறந்த நாள்னு நாலாயிரம் ரூபாய்க்குப் பட்டுப் புடவை எடுத்துக் கொடுத்த.."

"ஏன்.. எடுத்துத் தரக் கூடாதா? உன்கிட்ட பர்மிஷன் கேக்கணுமா? எதுக்கெடுத்தாலும் உங்கப்பாகிட்ட போய்த் தலையைச் சொறிஞ்சுக்கிட்டு உங்க அம்மா நிக்கற மாதிரியெல்லாம் என்னால நிக்க முடியாது. இது என்னோட காசு.. அப்படித்தான் செலவழிப்பேன்.."

"திமிருடீ.. சம்பாதிக்கிற திமிர்.. அதான் எங்கம்மா - அப்பாவைப் பத்தியெல்லாம் பேச வைக்குது. எனக்குத் தேவைதான்.. 'இந்தப் பொண்ணு வேணாம்டா.. வாழ்க்கைக்கு ஆகாது'னு எங்கம்மா சொன்னாங்க.. நான் கேக் கலையே!"

அவனையறியாமல்.. கோபத்தில் தான் வார்த்தைகளை விட்டு விட்டான். ஆனால், ஒரு இளம் மனைவியால்.. அதுவும் காதல் மனைவியால்.. தாங்கிக் கொள்ளவே முடியாத மிக மிகக் கடினமான வார்த்தைகள் அவை!

ராஜி ஆத்திரமும் அழுகையுமாகக் கதறினாள். அவனை, அவன் பெற்றோரை.. அவனுடன் வேலை பார்க்கும் பெண்ணை.. எல்லோரையும் இழுத்தாள் சண்டையில்!

கணவனையும் மனைவியையும் தவிர வேறு யாரும் இல்லாத வீட்டுக்குள் பிரச்னை என்று வந்து விட்டால், அது எந்தக் கட்டம் வரை வேண்டுமானாலும் போகும். அந்த நேரத்தில் என்ன வார்த்தைகளைப் பேசினாலும் அது கிணற்றுக்குள் போட்ட பஞ்சு மூட்டையைப் போலத்தான் ஊறி, கனத்து திரும்ப எடுக்கவே முடியாதபடி ஆகிவிடும்.

கடைசியில் எதனால் பிரச்னை ஆரம்பித்ததோ அது மறந்து போய், வந்து விழுந்த வார்த்தைகளே வில்லனாகி விரிசலை ஏற்படுத்தும். ‘நீ இப்படியெல்லாம் பேசின பிறகு.. எந்த முகத்தை வச்சிக்கிட்டு உன்னோட வாழ்றது?’ என்கிற கேள்வி வரும்.

“அம்மா, அப்பா..” என்று பிறந்த வீட்டில் போய்ப் பிரச்னையைச் சொன்னாலோ.. இன்னும் மோசம்!

“என் மக வாழ்க்கையே போச்சே..” என்கிற அழுகையிலும் அவர்கள் விடும் சாபத்திலும் ‘நாமளும் கொஞ்சம் பொறுத்திருக்கலாம்’ என்கிற லேசான குற்ற உணர்வும் காணாமல் போய், ‘அந்த மகா பாதகனிடம் எப்படித்தான் இத்தனை மாதங்கள் குப்பை கொட்டினோமோ..’ என்று மனம் பொருமும்.

ராஜிக்கும் அப்படித்தான் நடந்திருக்க வேண்டும். ஆனால், அவள் அதிர்ஷ்டம்.. ராஜியின் அப்பா கொஞ்சம் தெளிவானவராக இருந்தார். மகள் பிரச்னையுடன் வந்ததுமே அவர் முதலில் போய் சந்தித்தது மனோஜைத்தான்! நடந்ததையெல்லாம் அவனிடம் கேட்டறிந்தார்.

பிறகு, நேராக மனைவியிடம் வந்து, “நீ அவளை குழப்பாதே..” என்று தெளிவாகச் சொன்னவர், மகளை தனியே அழைத்துப் பேசினார்.

அவள் மனதில் இருந்த அத்தனையையும் கொட்ட அனுமதித்தவர், “நீ இன்னின்ன தப்பையெல்லாம் செஞ்சியா?” என்று கேட்டார். “ஆம்” என்று தலையசைத்து, ஆச்சர்யத்துடன் நோக்கியவளிடம், விரிவாகப் பேசினார்..

“நான் இப்பதான் மாப்பிள்ளையைப் பார்த்துட்டு வர்றேன். ரொம்ப ஃபீல் பண்றார்மா. நீ என்னென்ன பேசினனு சொல்றதுக்குக்கூட அவ்வளவு தயங்குறாரு.. நீ என்னடான்னா, அவ்வளவு பழியையும் அவர் மேல போடுற..

அவர்கிட்ட கேக்காம கடைக்குப் போறதுல தப்பில்லம்மா. உங்க ரெண்டு பேருக்கும் இடையில அதுக்கான புரிந்துகொள்ளுதல் இருந்திடுச்சுன்னா எதுவுமே தப்பில்ல. ஆனா அவருக்கு ஏற்கெனவே ‘நீ அவரை மதிக்கறதில்லையோ’ங்கற எண்ணம் இருக்கு. அதை நீதான் உருவாக்கி வெச்சிருக்கிற.. அதை நீயே மாத்தி,

நம்பிக்கையை ஏற்படுத்திட்டேனா நீ என்ன செஞ்சாலும் அவர் ஏன்னு கேக்க மாட்டார்..

**உன் முன்னால்
மட்டும்தான்
சிரிப்பை மனசுக்கும்
வார்த்தைகளை
விழிகளுக்கும்
இடம் மாற்றி
விடுகிறேன்..
இதழிலிருந்து!**

- ப.சாந்தி

நீ பெரிசா நான் பெரிசாங்கறது இல்லம்மா வெற்றி. நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து வாழுற வாழ்க்கை பெரிசுங்கறதை நீயும் அவரும் புரிஞ்சுக்கணும். அதுதாம்மா வெற்றி. 'நம்ம புருஷன்தானே'னு ஈஸியா நினைச்சு, காயப்படுத்துற மாதிரி நீ பேசிட்ட.. 'என்ன இருந்தாலும் நம்ம புருஷன் இல்லையா? அவர் மனசு நோகலாமா'ங்கற எண்ணம் உன் மனசுல இருந்திருந்தா அப்படி பேசியிருக்க மாட்ட.."

- அவர் பேசப் பேச தான் செய்த தவறு புரிந்தது ராஜிக்கு!

மருமகனிடமும் அதே வார்த்தைகளைத்தான் பக்குவமாக எடுத்துச் சொல்லியிருந்தார்..

"நீ நல்லா யோசி. நானும் அம்மாவும் கொஞ்சம் கடை வரைக்கும் போய்ட்டு வர்றோம்.." என்று மனைவியையும் இழுத்துக் கொண்டு கிளம்பினார்.

அடுத்த அரை மணி நேரத்தில் வினோத் தயங்கித் தயங்கி ராஜியின் வீட்டுக்கு வந்து காலிங்பெல்லை அடித்தான். பெற்றவர்களை எதிர்பார்த்து கதவைத் திறந்த ராஜிக்கு, வினோத்தைப் பார்த்ததுமே அடிவயிற்றிலிருந்து வெடித்துக் கிளம்பியது இனம் தெரியாத ஒரு உணர்வு!

விசும்பலும் அழுகையுமாய் முதல் சில நிமிடங்கள்..

மன்னிப்பும் கெஞ்சலுமாய் அடுத்த சில நிமிடங்கள்..

ஆக்ரோஷ அணைப்பில் அடுத்த சில நிமிடங்கள் கழிய..

எங்கிருந்தோ காற்றில் மிதந்து வந்தது பழைய பாடல் ஒன்று..

'பிரிந்தவர் மீண்டும் சேர்ந்து விட்டால் அங்கு பெண்மையின் நிலை என்ன?

மௌனம்!'




தெரிந்த டாக்டர் தம்பதி அவர்கள். நேரம், காலம் பாராமல் ஓடி, ஓடி உழைப்பவர்கள். வாரத்தில் என்றைக்கேனும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டால் அபூர்வம். வேலை பளுவும் இயந்திரத்தனமான வாழ்க்கையும் அவர்களின் அன்னியோன்யத்தை குறைத்து விட்டது போலத்தான் வெளி உலகுக்குத் தெரியும். ஆனால், அவர்கள் புத்திசாலிகள். அந்த இயந்திரத்தனமான வாழ்க்கையை எப்படியாவது திட்டமிட்டு ஏமாற்றி விடுவார்கள் வருடத்துக்கு இரண்டுமுறை!

எல்லா வேலைகளையும் ஜூனியர்களிடம் ஒப்படைத்து விட்டு, ஸ்விட்சர்லாந்து, ஃபிஜி தீவுகள் என்று ஹாயாக கிளம்பிப் போவார்கள். பெயர் தெரியாத நதிகளிலும் கடற்கரைகளிலும் தங்கள் பத்து வயதையேனும் கரைத்துவிட்டுத்தான் திரும்பி வருவார்கள்.

நெருங்கிய தோழியான அந்த டாக்டரம்மாவிடம் ஒருமுறை பேசிக்கொண்டிருந்தபோது பல விஷயங்களையும் மனம்விட்டுப் பகிர்ந்து கொண்டார்.

“நானும் சரி.. டாக்டரும் சரி.. அந்த நாட்களுக்காகக் கிட்டத்தட்ட ஏங்கிட்டு இருப்போம். கிளம்பும்போதே அவருக்கு ரொம்பப் பிடிச்ச பாடி ஸ்ப்ரே, ஒத்தை ரோஜாப் பூ, நழுவி நழுவிப் போற ஸிந்தெடிக் சேலைனு நான் வேற மாதிரி மாறிடுவேன்” என்று வெட்கம் பூத்தார் (மற்றபடி காட்டன் புடவை அணிந்து, கொண்டை போட்டு, டிபிகல் டாக்டராக வலம் வருபவர் அவர்).

“வெளிநாடு போறது ஊர் சுத்திப் பார்க்கறதுக்காக இல்ல. எங்களை நாங்களே நல்லா இன்னொரு முறை பார்த்துக்கத்தான் இந்தப் பயணம். டிராவல்லயே ‘மல்லிகை என் மன்னன் மயங்கும்’ கண்ணதாசன் பாட்டுல ஆரம்பிச்சு. எம்.எஸ்.உடைய ‘காற்றினிலே வரும் கீதம்’ வரைக்கும் எங்க எம்.பி த்ரீல இருக்கும். ஆளுக்கு ஒரு இயர் பீஸை காதுல வச்சுக்கிட்டு உருகி உருகி பாட்டு கேட்போம்.

எங்க டைம் டேபிள் வாழ்க்கை எல்லாம் அங்க மறந்துடுவோம். முழிப்பு வர்ற வரை தூக்கம். அப்புறமா எழுந்து ஏதாவது சைட் சீயிங்! ஸ்வெட்டர் மாட்டிக்கிட்டு, ஒருத்தர் தோள்ல ஒருத்தர் சாய்ஞ்சுக்கிட்டு..” - சொல்லச் சொல்ல குழந்தையாகிப் போகிறார் அந்த டாக்டரம்மா! சே.. இளம் தம்பதிகள் கூட பார்த்துப் பொறாமைப்படும் அன்பு வாழ்க்கை அது!

- இப்படியான ஒரு ரீ-சார்ஜ், ஏதோ அந்த டாக்டர் தம்பதிகளுக்குத்தான் தேவை என்று நினைத்து விட வேண்டாம். நம் ஒவ்வொருவருக்குமே அத்தியாவசியம் அது!

சூர்யபிரகாஷும் மஞ்சுவும் கூட கிட்டத்தட்ட இந்த டாக்டர் தம்பதியைப் போலத்தான். ஒரு சின்ன வித்தியாசம்.. இவர்கள் மாதாமாதம் தங்களை ரீ-சார்ஜ் செய்து கொள்கிறவர்கள்.. அதற்கென்று பைசா செலவு செய்யாமல்!

மஞ்சு இல்லத்தரசி. ஆனால், வீட்டில் இருந்தபடியே ஒரு கம்ப்யூட்டரின் உதவியால் சில வேலைகளை செய்து கொடுத்து சம்பாதிக்கிறாள். சூர்யாவோ காலை ஒன்பது மணிக்கு அலுவலகம் போனால், வீடு திரும்ப இரவு பன்னிரண்டு.. சமயத்தில் ஒரு மணி கூட ஆகிவிடும். அப்படி ஒரு வேலை. பகல் முழுக்க வீட்டு வேலைகள், வெளி வேலைகள், கடமையாற்ற அழைக்கும் கம்ப்யூட்டர் என்று எல்லாவற்றையும் கவனித்து, குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தந்து, சாப்பாடு ஊட்டி, கதை சொல்லி, தூங்க வைத்து, சூர்யா வீடு திரும்பும் முன் பாதி தூக்கத்துக்குப் போய் விடுவாள் மஞ்சு. காலையில் அவள் ஐந்தரைக்கு எழுந்தால்தான் குழந்தைகளைக் கிளப்பி கணவனையும் அனுப்ப முடியும்.

தூக்கக் கலக்கத்துடன் வந்து கதவு திறப்பவளைப் பார்க்கப் பாவமாக இருக்கும் சூர்யாவுக்கு. சில நாட்கள் அருகில் இருந்து சாப்பாடு போடுவாள். பல நாட்கள் அவனே அவளை படுக்கச் சொல்லி விடுவான். காலையில் லேட்டாக எழும் அவனுக்கு அவளுடன் பேசக்கூட நேரம் இருக்காது.

கிடைக்கும் ஒரு ஞாயிறும் கூட ஒரு வார அசதியை தூங்கிக் கழிக்கவும் குழந்தைகளின் லூட்டியில் மெய் மறக்கவுமே சரியாக இருக்கும்.

அதனால்தான் அப்படி ஒரு மாஸ்டர் பிளான் போட்டு செயல்படுத்தினான் சூர்யா. மாதத்தில் ஒரு சனிக்கிழமை மட்டும் மாலையில் கொஞ்சம் சீக்கிரமே வீடு திரும்பும்படி வேலைகளை முறைப்படுத்திக் கொண்டான். மஞ்சுவையும் குழந்தைகளையும் பீச்சுக்கோ பார்க்குக்கோ அழைத்துச் சென்றுவிட்டு, அப்படியே நேராக மாமியார் வீட்டுக்குப் போய் குழந்தைகளை அங்கேயே விட்டுவிட்டு மஞ்சுவும் சூர்யாவும் மட்டும் வீடு திரும்புவது என்பதுதான் அந்த மாஸ்டர் பிளான்.

குழந்தைகள் தங்கள் வீட்டில் தங்குவதில் பாட்டி - தாத்தாவுக்கு ஆனந்தம் எனில், குழந்தைகளுக்கு அது குதூகலம்! சூர்யாவுக்கும் மஞ்சுவுக்கும்.. அதை வெறுமனே சில வார்த்தைகளில் சொல்லி விட முடியுமா என்ன?

பைக்கை சூர்யா ஸ்டார்ட் செய்தபோதே சிலிர்த்தது இருவருக்கும். கல்யாணமான புதிதில் இப்படி வந்தது. நடுவில் மகன் இல்லாமல் சூர்யாவின் முதுகுடன் ஒட்டிக் கொண்டு பைக்கில் உட்காருவதே மயக்கும் அனுபவமாக இருந்தது அவளுக்கு. அவனுக்கும்தான்! நேராக உட்கார்ந்து வந்தவன் லேசாக அவள் மீது சாய்ந்து கொண்டான்.

“சேட்டை..” என்றாள் மஞ்சு.

“ஆமா.. அப்படித்தான்..” - இது சூர்யா.

“வண்டியைப் பார்த்து ஓட்டு சூரி..” செல்லமாகக் கண்டித்தாள்.

மஞ்சு இளகி இருக்கிறாள் என்பதை அவனுக்கு உணர்த்தும் குறிப்பு அந்த ஒருமை விளிப்பு! இன்னும் கொஞ்சம் பின் நகர்ந்து உட்கார்ந்தான். கன்னம் துவங்கி காது வரை சூடானது மஞ்சுவுக்கு. அப்படியே அவன் முதுகின் மீது தலை வைத்து சாய்ந்து கொண்டாள்.

குழந்தைகள் தூங்கி விட்டார்களா என்கிற பதட்டம் இல்லாமல், விழித்து விடுவார்களோ என்கிற பயம் இல்லாமல், ஹனிமூன் தம்பதி போல.. அத்தனை சுதந்திரம்.. அத்தனை சந்தோஷம்.. மாதம் ஒரு முறை வாய்த்துக் கொண்டிருக்கிறது அவர்களுக்கு!

இதோ.. நேற்றுகூட புடவை கட்டும்போது பீரோ கண்ணாடியில் தன்னையே ஒருமுறை அழுந்தப் பார்த்து, என்னவோ ஞாபகம் வந்தவளாக முகம் சிவந்து கொண்டாள் மஞ்சு!

இவர்களையெல்லாம் அத்தனை சீக்கிரம் வயோதிகம் தீண்டிவிடுமா என்ன?

# ரொமான்ஸ் ரகசியங்கள்! - 10



**க**ணவனும் மனைவியும் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு அர்த்தநாரீஸ்வரரை விடவும் சிறந்த எடுத்துக் காட்டு உண்டா என்ன? ஆண் பாதி பெண் பாதியாக.. ஆணே பெண்ணாக.. பெண்ணே ஆணாக.. ஆணும் பெண்ணும் சேர்ந்த ஒற்றை உயிராக.. பிரித்தறிய முடியாமல் பிணைந்திருப்பதுதான் தாம்பத்யம்.

ஆனால், இரு வேறு தனித்தனி மனிதர்கள்.. தனித்தனி சிந்தனை உள்ளவர்கள்.. தனிப்பட்ட கருத்துக்கள் உள்ளவர்கள்.. ஒருவராவது சாத்தியமா? நிச்சயமாக சாத்தியம்தான்! தினசரி நாம் செய்யும் சமையலே இதற்கு மிகச் சிறந்த உதாரணம். மலையில் விளையும் ஏலக்காயும் வட இந்தியாவில் விளையும் பாஸ்மதி அரிசியும் கடல் தரும் உப்பும் இன்ன பிறவும் சேர்த்து பிரியாணி செய்கிறோமே.. கமகமக்கும் அந்த பிரியாணியில் தனித்துத் தெரிவது அரிசியா? உப்பா? ஏலக்காயா? இவையெல்லாம் தனித்தனியே தெரிந்தால் அந்த பிரியாணிதான் வாயில் வைக்க சகிக்குமா?

வெவ்வேறு குணங்களும் மணங்களும் கொண்ட பொருட்கள் சேர்ந்து, தங்களின் சிறப்புகளையெல்லாம் கொடுத்து, முற்றிலும் புதிய சுவை கொண்ட பிரியாணியை உருவாக்குவது போலத்தான் வெவ்வேறு இடங்களில் பிறந்து, வெவ்வேறு எண்ணங்களும் செயல்களும் கொண்டு வளர்ந்த இரு மனிதர்கள் திருமணம் என்கிற பந்தத்தில் இணையும்போது முற்றிலும் புதிய ஒரே மனிதனாக.. அல்லது மனுஷி யாக மாறுகிறார்கள்.

அத்தனை நாளும் பெண் பற்றி என்னென்னவோ நினைத்துக் கொண்டிருந்த ஆண்தான், மனைவி மாதவிடாய் சமயத்தில் துடிக்கையில் அவள் வயிற்றைக் கொஞ்சம் அழுத்திப் பிடித்து விடுகிறான். 'வீட்டு வேலை இன்னிக்கு நிறைய இருந்துச்சோ..' -விரல்களை மென்மையாய் சொடுக்கெடுக்கிறான். தன் வாரிசைச் சுமந்து தலை சுற்றி, வாந்தி எடுத்து மயங்கும் மனைவியை கரங்களால் தாங்கி வசதியாகப் படுக்க வைத்து, அந்த இடத்தையும் அருவருப்பு கொள்ளாமல் சுத்தம் செய்கிறான்.

ஆணைப் பெண்ணாக மாற்றுகிறது காதல்!

பிறந்த வீட்டில் எதற்கெடுத்தாலும் சிணுங்கி, கட்டெறும்புக்கும் கரப்பான் பூச்சிக்கும் பயந்து மருள மருள விழித்தவள்தான் சோர்ந்து போயிருக்கும் கணவனின் தலை கோதிச் சொல்கிறாள்.. “ஆபீஸ்ல பிரச்னையா? கவலைப்படாதீங்கப்பா. இந்த வேலை போனா என்ன? உலகத்துல பிழைக்கிறதுக்கா வழி இல்ல! காலை வீசி எடுத்து வெச்சா வழியெல்லாம் பிழைப்புத்தான்!”

பெண்ணை ஆணாகவும் மாற்றுகிறது காதல்.

சிரிக்கையில் சிரித்து, அழுகையில் அழுது, நெகிழ்கையில் நெகிழ்ந்து, வியக்கையில் வியந்து.. நீயாகவும் நானாகவும் அன்றி நாமாக வாழ்கிற அற்புதமான அனுபவமல்லவா கணவன் - மனைவி உறவு என்பது!

ப்ரியாவும் ரோஹித்தும்கூட அப்படி ஒரு தம்பதிதான். கதை, கவிதை என்றால் “வேஸ்ட் ஆஃப் டைம்” என்று சொல்லும் ரகம் ரோஹித். ப்ரியாவோ அரிசி மூட்டையைக் கடித்து விட்டு ஓடி ஒளியும் எலிக் குஞ்சை வீடே அடிப்பதற்குத் தேட, ‘பிறந்த குழந்தை மாதிரி எவ்ளோ அழகு அந்த எலிக் குஞ்சு!’ என்று அதை வர்ணித்துக் கவிதை எழுத வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருப்பாள்.

திருமணம் முடிந்து ஹனிமூன் போன இடத்தில் நாலு வரியைக் கிறுக்கி ‘கவிதை’ என்று கணவனிடம் கொடுத்தாள். சத்தியமாக அதில் ஒரு வார்த்தைகூட புரியவில்லை ரோஹித்துக்கு. ஆனாலும் விடாமல் திரும்பத் திரும்ப வாசித்தான். கடைசியாக உதடு பிதுக்கி, அவள் அருகில் அமர்ந்து, தோள்களைப் பற்றி, “நீ ஒருமுறை வாசி” என்றான். தெளிவான உச்சரிப்பில் அவள் அதை வாசிக்க, அவள் முகத்தையே உற்றுப் பார்த்தவன் சொன்னான்.. “உன் கவிதை அழகா இருக்கானு தெரியல.. ஆனா, அதை வாசிக்கும்போது உன்னோட உதடு ரொம்ப அழகா இருக்கு! வெரி செக்ஸி!” அவள் காதுகளுக்குள் ரகசியம் சொன்னான்.

அன்று மாலையே அருகில் இருந்த புத்தகக் கடையிலிருந்து ஒரு கவிதைப் புத்தகம் வாங்கி வந்து பரிசளித்தான். அன்று உருகத் துவங்கியவள்தான் ப்ரியா! இன்று வரை அவர்களின் அன்பு ஊற்று உறைந்து போகவில்லை. இதோ.. இன்றுகூட அவனுக்கு ரொம்பவும் பிடிக்கிற கர்னாடக இசைக் கச்சேரிக்கு சரிகமபதநி மொத்தம் எத்தனை எழுத்து என்றுகூடத் தெரியாத ப்ரியா அழகாக உடுத்தி கிளம்பிக் கொண்டிருக்கிறாள்.

ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் ஆர்வம்.. இதை விட கணவனையும் மனைவியையும் பசை போட்டு ஒட்டும் அம்சம் வேறென்ன?

# ரொமான்ஸ் ரகசியங்கள்! – 11



பிறருடன் தங்களை ஒப்பிட்டுப் பார்த்து வாழ்க்கையை நரகமாக்கிக் கொண்டவர்கள் இங்கு ஏராளம்.. மாலினி தனசேகரைப் போல!

ஒரு சின்னஞ்சிறிய கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள் மாலினி. கல்லூரிப் படிப்பை முடித்ததுமே கல்யாணம் செய்து அனுப்பினார்கள் அவளைப் பெற்றவர்கள். கல்லூரிக் காலம் வரை சுடிதார் கூட அணிந்ததில்லை மாலினி.. தாவணிதான்! அத்தனை கண்டிப்பு அவள் தந்தை.

திருமணம் முடிந்து சென்னை வந்த மாலினிக்கு பார்க்கும் ஒவ்வொரு விஷயமுமே ஓராயிரம் ஆச்சர்யங்களைக் கொடுத்தது.

தன் ஊரின் மொத்த ஜனத்தொகையையும் உள்ளடக்கிய அந்த அபார்ட்மெண்ட்டின் பிரமாண்டம்.. வீட்டுக்கு வீடு எல்.சி.டி தொலைக்காட்சி ஹோம் தியேட்டரோடு அலறும் ஆடம்பரம் என்று பார்த்துப் பார்த்து பிரமித்துப் போனாள். ஒரு பார்வையாளராக இருந்து வியப்பதோடு இது நின்றிருந்தால் பிரச்னை இல்லை. அவள் தானும் அந்த உலகத்தோடு கலக்க முயற்சித்ததும்.. கலந்து விட்டதாகக் காட்டிக் கொண்டதுமே சிக்கலாகிப் போனது.

துப்பட்டாவை இரு புறமும் 'பின்' பண்ணி, கிளம்பிச் செல்லும் அடுத்த தெரு டீச்சர் மகளையே 'அல்ட்ரா மாடர்ன்' யுவதியாக அவள் கிராமம் வர்ணித்திருக்க, மினி ஸ்கர்ட்டும் டி–ஷர்ட்டும் போட்டு அபார்ட்மெண்ட்டில் வலம் வந்த பெண்களின் ஸ்டைலும் மிதப்பும் அவளின் விழி வழியே மனசுக்குள் விழுந்தன. மாற்றங்களும் கொடுத்தன.

மாலினி சுரிதாருக்கு மாறியபோது அதை ரசித்த தனசேகரால், அவளுடைய ஜீன்ஸ் பிரவேசத்தை ஜீரணிக்க முடியவில்லை. பார்லருக்குப் போய் அவள் கூந்தலை சீராக்கிக் கொண்டு வந்ததை புன்முறுவலுடன் ஏற்றுக் கொண்ட அவனேதான், திடுமென்று ஒரு நாளில் அவள் 'பாப்' செய்யப்பட்ட தலையுடன் வந்து நின்றபோது கோபத்தில் முகம் சிவந்தான்.

சிறு உரசல்களும் சின்னச் சின்ன தீப்பொறிகளுமாக நகர்ந்து கொண்டிருந்த அவர்களின் இல்லறம், நெருப்பு பிடித்ததென்னவோ அந்த ஒற்றை தினத்தில்தான்.

அன்று.. மாலினிக்காக மட்டுமே அலுவலகத்திலிருந்து கொஞ்சம் சீக்கிரமாக வீடு திரும்பிய தனசேகர், ஏதேதோ கற்பனைகளோடு மாடிப் படிகளில் ஏற, ஜீன்ஸ் – குர்தா – பாப் கூந்தலுடன் வீட்டைப் பூட்டிக் கொண்டு மாலினி படி இறங்கிக் கொண்டிருந்தாள்.



"எங்கே கிளம்பிட்ட மாலு?" – எரிச்சலை மறைத்தபடியேதான் கேட்டான்.

"ஒரு சின்ன சோஷியல் ஆக்டிவிட்டி.. ரெண்டு மணி நேரத்துல வந்துடுவேன்.."

"எங்க?"

"ரெண்டு தெரு தள்ளித்தான்.. நான் ஆட்டோ பிடிச்சுப் போய்டுவேன்.." – வேக வேகமாகச் சொன்னாள்.

படியேறியவன் அப்படியே திரும்பி இறங்கத் துவங்கினான்..

"பரவால்ல.. நான் உன்னை டிராப் பண்றேன். வா!"

"வேணாம் வேணாம்.. நானே போய்டுறேன்.." அவள் மறுத்த வேகம் அவனை உறுத்த, அப்போதைக்கு விட்டு விட்டான். அவள் வீடு திரும்பியதும் கேட்டான்..

"ஏன் மாலு என்னை வர வேணாம்னு சொல்லிட்ட?"

"இல்லை சேகர்.. அது.. அது.. அங்க எல்லாரும் ரொம்பப் பெரிய ஆளுங்க.."

சட்டென்று இதயத்தில் கூரான அம்பு தைத்ததுபோல வலியில் துடித்தான் தனசேகர். இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் பேசினான்..

"சரி.."

"எல்லாரும் கார்ல வந்து இறங்குவாங்க. நான் பைக்ல போய் இறங்கினா.."

இன்றும் கூட மாலினியின் குடும்பமே 'பெரிய இடத்து மாப்பிள்ளை'யாக பார்க்கும் தன்னைத்தான், இத்தனை அற்பமானவனாக மதிக்கிறாளா மாலினி? அவனால் நம்ப முடியவில்லை. அன்று அவளுக்காக வாங்கி வந்த மல்லிப்பூச் சரம் அவள் முகத்திலேயே கசக்கி எறியப்பட்டதிலும், கூச்சலும் அழுகையும் புலம்பலுமாக அந்த இரவு கழிந்ததிலும் அவனைப் பொறுத்தவரை சில நியாயங்கள் இருந்தன.

பொருளாதாரம் மட்டுமல்ல.. ஒரு கட்டத்துக்கு மேல், தனசேகரே பிரச்னையானான் மாலினிக்கு. அவன் அணிகிற உடைகள் எதுவும் டிரெண்டிலேயே இல்லை.. அவனுடைய ஹேர் ஸ்டைல் கௌசல்யாவின் கணவனைப் போல இல்லை.. சென்னைவாசிகள் பலரையும் போல அவன் வெளி இடங்களில் தன் கைகளை இறுகப் பற்றி நடப்பதில்லை.. நிறைய விதங்களில் கிராமத்து மனிதனாகத்தான் இருக்கிறான்.. பேசுகிற ஆங்கிலம் கூட அத்தனை அழகாக இல்லை.. – இப்படி அவன் மீதான புகார்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போனது.

வெளி இடங்களில் பார்க்கிற ஆண்களும் பெண்களும் அவளைப் புகழ்வதை அவள் தூண்டிலாகப் பார்க்கவில்லை. கிரீடங்களாக ஏற்றுக் கொண்டாள். தான் ஒரு பேரழகிதான் என்ற கர்வம் கரையைக் கடந்தது. தன்னுடைய அழகுக்கும் அறிவுக்கும் வானலோகத்தில் இருந்து இறங்கி வந்த ஒரு தேவன் போன்றவனை கைப்பிடித்திருக்க வேண்டுமே தவிர, இப்படி ஒரு அசட்டு அம்மாஞ்சியை திருமணம் செய்து கொண்டது எத்தனை பெரும் தவறு என்று அவள் மனசுக்குள் ஒரு மாநாடே நடந்தது. அதன் பிறகு, அவள் ரொம்பவே மாறிப் போனாள்.




தனசேகரைக் கண்டாலே பிடிக்கவில்லை அவளுக்கு. அவன் தொட்டால் அருவருப்பாக இருந்தது. அவனுடைய மென்மையான புன்னகை அவளை எரிச்சல்படுத்தியது. ஒரு கட்டத்தில் அவன் கதறக் கதற கேட்காமல்.. சின்ன மன உறுத்தல்கூட இல்லாமல் அவனை விட்டே பிரிந்தாள். தனசேகர் தன்னைக் கொடுமைப்படுத்துவதாக பெற்றோரிடம் சொல்லி, அவர்களை தன்னோடு தங்க வைத்து, தானும் ஒரு வேலையைத் தேடிக் கொண்டு.. சென்னையிலேயேதான் குடியிருக்கிறாள் மாலினி.

இன்று.. அவள் மிஸ். மாலினி மட்டுமில்லை.. சீரான நதி போல ஓடிக் கொண்டிருந்த ஓர் அருமையான வாழ்க்கையை மிஸ் பண்ணி விட்ட மாலினியும்கூட! திருமதி மாலினியாக இருந்த–போது அவளை வார்த்தைகளால் மாலை சூடிய ஆண்கள், இப்போது தனித்து நிற்கும்போது அவளைக் கண்டாலே ஓடி, ஒளிகிறார்கள். ஆனால், இரண்டாம் பேர் அறியாமல் அவள் செல்போனில் மர்ம அழைப்புகள் தந்து, இருட்டு முகம் காட்டுகிறார்கள்.

'தான் வியந்து பார்த்த இந்த உலகம் இத்தனை கொடியதா' என்று இப்போதும் பிரமித்துப் போய்தான் உட்கார்ந்திருக்கிறாள் மாலினி.. வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு!

ஒன்று தெரியுமா.. இந்த உலகத்தில் யாருமே குறைகள் அற்றவர்களாக இருப்பதில்லை. நம்மைச் சுற்றிலும் இருக்கும் குறைப்பட்ட மனிதர்களை உதாரணப் புருஷர்களாகக் கொண்டு, நம்மை மாற்றிக் கொண்டிருப்பதைவிட, நமக்கான குறைகள் நமக்கான நிறைகளோடு நாமாகவே இருக்கலாமே!

வாழ்க்கை ஒப்பற்றது.. அதை ஏன் அடுத்தவர்களோடு ஒப்பிட்டுக் கொண்டு?!

# ரொமான்ஸ் ரகசியங்கள் – 12



'என் மனைவி (கணவர்) என்னிடம் சின்னதாகக் கூட பொய் சொல்ல மாட்டாள்(ர்)..' என்கிற பரஸ்பர நம்பிக்கைக்கு இருக்கும் சக்தி அற்புதமானது! சொல்லப் போனால், அந்த நம்பிக்கை என்ற சிமென்ட் பூசிதான் இல்லறம் என்ற கட்டடமே எழுப்பப் படுகிறது.

அஸ்மிதாவுக்கு படிக்கிற காலத்திலேயே சிறு சிறு பொய்கள் பழக்கமாகி விட்டன. தேவையே இல்லாமல் பொய் சொல்வாள். யாராவது "எந்தப் பள்ளியில் படிக்கிறாய்?" என்று கேட்டால், தான் படிக்கிற சாதாரண பள்ளியின் பெயரைச் சொல்லாமல், அருகில் உள்ள மெட்ரிகுலேஷன் பள்ளியின் பெயரைச் சொல்வது.. உள்ளூரில் வாங்கிய கைக்குட்டையைக்கூட 'சிங்கப்பூரில் இருக்கும் மாமா அனுப்பியது' என்று சும்மாவேனும் சொல்லி வைப்பது.. இப்படி பைசா பெறாத பொய்களை அங்கங்கே இறைத்து வைப்பதில் அவளுக்கோர் அற்ப சந்தோஷம்.

குட்டிக் குட்டி பொய்கள்தான் என்றாலும் குட்டு வெளிப்படாமல் இருக்குமா என்ன? அம்மா, அப்பா.. ஏன், அவள் தோழிகளும் ஆசிரியர்களும் கூட அவள் பொய்களுக்குப் பழகித்தான் போயிருந்தார்கள். முகத்துக்கு நேரே ஆச்சர்யம் ததும்ப 'அப்படியா?' என்பார்களே தவிர, அந்தப் பக்கமாகத் திரும்பி தலையில் அடித்தபடியே ஒரு நமுட்டுச் சிரிப்போடுதான் நகருவார்கள். 'இதென்ன பெரிய கொலைக் குற்றமா?' என்ற எண்ணத்தில்தான் யாரும் அவளிடம் இது பற்றி விளக்கம் கேட்டதில்லை. அது எத்தனை பெரிய குற்றம் என்பது திருமணத்துக்குப் பிறகுதான் தெரிந்தது.

வருணைக் கைப்பிடித்து மூன்று மாதங்களே முடிந்திருந்த நேரம்.. ஆபீஸில் கொஞ்சம் வேலை இருப்பதால், 'தி.நகர் ஷாப்பிங்கை நீயே பார்த்துக் கொள்' என்று அவனேதான் சொல்லியிருந்தான். அங்கே வைத்து இவள் மதுமிதா அக்காவைப் பார்ப்பாள் என்று யாருக்குத் தெரியும்?

'ஏயப்பா.. பார்த்து எத்தனை நாளாச்சு!' என்று அக்காவும் தங்கையும் கொஞ்சி, மகிழ்ந்து, அருகில் இருந்த ஓட்டலுக்குப் போய் டிபன் சாப்பிட்டு, வீடு திரும்ப மாலை ஆறு மணியாகி விட்டது. கணவன் அலுவலகத்திலிருந்து வந்திருப்பானோ என்கிற பதற்றத்தோடு படியேறியவள், தான் பூட்டிய பூட்டு அதே கோணத்தில் தொங்கிக் கொண்டிருந்தது கண்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

வேகம் வேகமாக மில்க் குக்கரை ஸ்டவ்வில் வைத்து, உடை மாற்றி அவள் ஹாலில் உட்காரவும் அவன் வரவும் சரியாக இருந்தது.

"டி.நகர் போறேன்னு சொன்னேல்ல.. அதுக்குள்ள வந்துட்டியா?" நிஜமான ஆச்சர்யத்துடனும் அக்கறை யுடனும் கேட்டான் அவன். 'அக்காவைப் பார்த்ததைப் பற்றி அஸ்மிதா

சொல்லியிருந்தாலும் அவன் மகிழ்ந் திருக்கத்தான் போகிறான். ஆனால், 'நானும் இன்றைக்கு லேட்தான்' என வீணாக ஏன் ஒப்புக்கொள்ள வேண்டும்?' என்று யோசித்தது அஸ்மிதாவின் பொய்மனம்!

"நான் வந்து ஒன் அவர் ஆகுதே.. அங்க வேறென்ன வேலை? கடைக்குப் போனமா.. வீட்டுக்கு வந்தமானு இருக்குறதுதான் எனக்குப் பிடிக்கும்.." என்று தொடங்கி பெரிய பில்டப்பே செய்தாள்.

அடுத்த இரண்டே நிமிடங்களில் தொலைபேசி ஒலித்தது.. அந்த பில்டப்பை எல்லாம் தகர்த்தது. போனில் அழைத்தவள் மதுமிதா அக்காவேதான்! எடுத்தவன் வருண்..

"நல்லாயிருக்கீங்களா? அஸ்மி வீட்டுக்கு வந்துட் டாளா? 'நீங்க வர்றதுக்குள்ள போகணும்'னு புலம்பிக் கிட்டே இருந்தா.."

"வந்துட்டாளே.." – இது வருண்.

"அட.. கௌம்பி அரை மணி நேரத்துல வீட்டுக்கே வந்துட்டாளா? பரவாயில்லையே.. ரொம்ப நாள் கழிச்சு பார்த்ததால நேரம் போறது தெரியாம பேசிக்கிட்டு இருந் துட்டோம். எங்க நீங்க வந்து வெய்ட் பண்ற மாதிரி ஆகிடுச்சோனுதான்.. பதறிப்போய் போன் பண்ணினேன்.." என்று பேசி அவள் போனை வைக்க.. வருணின் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே!

அன்று அவனுக்குள் ஒட்டிக் கொண்ட சந்தேகப் பிசாசை அதன் பிறகு அவனை விட்டு விரட்டவே முடிய வில்லை.

'ஒரு சின்ன பொய்தானே.. இதுக்கா வருண் இந்தளவுக்கு சந்தேகப்படணும்?' என்று நீங்கள் அஸ்மிதாவின் பக்க நியாயத்தைப் பேசலாம். ஆனால், 'இத்தனை சின்ன விஷயத்துக்கே இவ்ளோ பெரிய பொய் சொல்றாளே.. அப்பிடின்னா, பெரிய பெரிய விஷயத்துலல்லாம் இவளை எப்படி நம்புறது?' என்று மனதுக்குள் மறுக வருணுக்கும் வலுவான நியாயம் உண்டு! அதன் பிறகு அஸ்மிதா என்ன சொன்னாலுமே 'இது எந்த அளவு உண்மையோ!' என்று கொஞ்சம் எரிச்சலுடனேயேதான் அவனுக்கு பார்க்கத் தோன்றியது.

வசந்தமாக வாழ வேண்டிய வாழ்க்கையை இப்படி ஒரு சின்ன பொய்யால் கெடுத்துக் கொண்ட ஏராளம் அஸ்மிதாக்கள் நம்மிடையே உண்டு.

பொதுவாகவே இல்லறம் என்பது சமூக வாழ்க்–கையில் இருந்து வேறுபட்டது. சமூக வாழ்க்கையில் ஒரு நபரிடம் நாம் பழகுகிற பழக்கம், அவரை பெரிதாக ஒன்றும் பாதிப்பதில்லை. காரணம், அவருக்கு நாம் மட்டுமே முக்கியமில்லை. 'ஆயிரம் பேரைப் பார்க்கிறோம்.. ஆயிரம் பேரிடம் பழகு கிறோம்.. அதில் ஒருவர் நம்மிடம் உண்மையாகப் பழகவில்லை என்றால் என்ன செய்ய முடியும்? அவர் குணம் அப்படித்தான் என்று ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்' என்று அவர்கள் சமாதானம் அடைந்து விடுகிறார்கள்.

ஆனால், கணவன் – மனைவிக்குள் அப்படிப்பட்ட சமாதானம் ஏற்படுவதில்லை. நாம் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும்.. ஏன், நம் மூச்சுக் காற்று கூட நம் துணைக்கு முக்கியம். இந்த உலகத்தில் யாரும் உங்கள் மீது வைக்காத கவனத்தை உங்கள் துணைவி(வர்) வைத்திருப்பார். அதில் சின்னப் பிசகு என்றாலும், 'முதல் கோணல் முற்றும் கோணல்' என்பது போலத்தான் ஆகிவிடும் வாழ்க்கை.

திருமணத்துக்கு முன்பு வரை சாதாரணமான விஷயமாகத் தெரிந்த அஸ்மிதாவின் பொய்கள் மண வாழ்க்கையில் பூகம்பமாக வெடித்ததற்குக் காரணம் இதுதான். விளையாட்டுக்குக் கூட கணவன் தன்னிடம் பொய் சொல்வதை விரும்ப மாட்டாள் ஒரு மனைவி. கணவனும் அப்படித்தான். மற்றவர் களிடம் பெருமையடித்துக் கொள்ளும் மனப்போக்கே தவறுதான்.. அதைத் தன் துணையிடமும் செய்து பார்த்து சந்தோஷிப்பது மாபெரும் தவறு.

அந்தரங்கம் என்ற சொல்லையே அர்த்தமற்ற–தாக்கி விடும் அதி அற்புத உறவல்லவா கணவன் – மனைவி உறவு! அதற்குரிய மரியாதையைத் தர வேண்டாமா?

# ரொமான்ஸ் ரகசியங்கள்! – 13



**வே**கமாக முன்னேறி வரும் புறநகர்ப் பகுதி அது. பஜார் ரோட்டில் சின்னதாக ஒரு மருந்துக் கடை வைத்திருந்தான் ரகு.

அப்போதுதான் கலாவுக்கும் அவனுக் கும் கல்யாணமானது. எப்போதும் போல ஓய்வு உளைச்சல் பார்க்காமல், ரகு கண்ணும் கருத்துமாக கடையைப் பார்த்துக் கொண்டான்.. கலா அவனைப் பார்த்துக் கொண்டாள்.

அந்தப் பழக்கம் என்று தொடங்கியது.. எப்போது தொடங்கியது என்பது இருவருக்குமே நினைவில் இல்லை. டாண் என்று சாயங்காலம் ஐந்து மணி அடித்தால் நம்பிக்கையான கடை பையனிடம் பொறுப்புகளைக் கொடுத்துவிட்டு ரகு வீட்டுக்குள் நுழைவான். கலா சுமாரான ஒரு புடவையை எடுத்து உடுத்தி, தலையில் கொஞ்சம் பூ வைத்து, டீயும் டிபனுமாகக் காத்திருப் பாள்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பி விடுவார்கள் இருவரும். நேரே தெரு முழுக்க நடந்து அது போய்ச் சேரும் அகலத் தெருவில் திரும்பி நடந்தால் முக்கிய சாலை வரும். வாகை மரங்கள் சூழ்ந்த சாலையின் வழியே நடப்பார்கள்.. நடப்பார்கள்.. மனசும் காலும் ஓயும் வரை நடப்பார்கள்!

பக்கத்து வீட்டு அக்காவின் மூணு வயதுக் குழந்தை செய்த சேட்டை, தங்கையிடமிருந்து வந்த கடிதத்தின் ஓரத்தில் கையெழுத்துப் போட்டிருந்த அம்மாவின் மஞ்சள் வாசனை.. என்று அவனிடம் சொல்ல ஏதாவது இருக்கும் கலாவுக்கு!

டாக்டர் கனவுடன் படிக்கிற தன் தங்கை பற்றி.. சமையல்கட்டும் பின்கட்டும் தவிர வேறு எதுவுமே தெரியாத தன் அம்மா பற்றி.. தான் செல்லமாக வளர்த்த கடா இந்த வருடத் திருவிழாவுக்கு பலியாகப் போவது பற்றியெல்லாம் கண்கள் மின்ன விவரிப்பாள் கலா.

குக்கிராமங்களைப் பார்த்திருக்கிறானே தவிர, அவற்றில் வளர்ந்திராததால் ஆச்சர்யத்துடன் கேள்விகள் எழுப்புவான் ரகு. 'இவரு பெரிய டவுன்ல வளர்ந்தவரு' என்று அவனை வாருவாள்.

திருமணமான புதிதில் அவர்களுக்கிடையே அன்னியோன்யம் வளர்த்ததே இந்த 'வாக்கிங்'தான்!

ரகுவும் மனம் திறப்பான்.. தாயும் தந்தையும் வேலை நிமித்தமாக வெளியூரிலேயே இருந்ததால் பாட்டியிடம் வளர்ந்த தன்னைப் பற்றி.. தாத்தாவின் சொத்தான இந்தக் கடை தனக்குத்தான் என்பதில் பாட்டி ரொம்பவே பிடிவாதமாக இருந்தது பற்றியெல்லாம் அவன் கலங்கிய கண்களுடன் பகிர, நேசத்துக்காக ஏங்கிக் கிடக்கும் அவன் ஈர மனசு புரிந்து உருகுவாள் கலா.

அந்த நடை அவர்களுக்குள் தோழமை வளர்த்தது. அன்பாய், அனுசரணையாய், தாயாய் பிள்ளையாய், ஒருவர் பாரத்தை ஒருவர் தாங்கி, ஒருவர் மகிழ்வை இரு மடங்காக்கி, அணு அணுவாக ரசித்து, ருசித்து காதல் பெருக் கினார்கள்.

பிள்ளைகள் பிறந்த பிறகும் அவர்கள் வளர்ந்த பிறகும் இந்த வாக்கிங் தொடர்ந்தது! குழந்தையை கையில் தூக்கிக் கொண்டு.. பிள்ளைகளை வீட்டுப் பாடம் செய்ய வைத்து விட்டு.. நடையில் உருவாகி வளர்ந்த அன்பு, நடை தளர்ந்த பருவத்திலும் கூட குறையவே இல்லை. மாறாக விருத்தியடைந்து கொண்டே போனது.

இதோ.. இப்போது மேற்படிப்பு என்றும் வேலை என்றும் பிள்ளைகள் திசைக்கொருவராகப் பிரிந்து போன பிறகும்கூட ரகுவும் கலா வும் வாக் போகிறார்கள்.. 'ரகோத்தமன் தாத்தா'வாகவும் 'கலாவதி அம்மா'ளாகவும்!

இப்போதெல்லாம் அவர்களுடைய உரையாடல்–களில் பிள்ளைகளின் வேலை, கல்யாணம், அவர்களின் எதிர்காலம் போன்றவற்றுக்கு முக்கிய பங்கு இருக்கிறது.

'காலம் போன காலத்துல பாருய்யா இதுங்களை!' என்று பல சமயங்களிலும் நக்கலடிக்கிறதுதான் ஊர்! ஆனால், அதையெல்லாம் அவர்கள் கண்டுகொள்வ–தில்லை. காரணம், ஒருநாள் உடல் நலமில்லை என்று வாக் போகாவிட்டால் கூட அதே ஊர்தான், 'என்ன ஸார்.. நேத்து உங்களை பார்க்கல?' என்று குசலம் விசாரிக்கிறது. விவஸ்தை கெட்ட ஊர்!

'எங்களுக்கே எங்களுக்கான தருணங் களை நாங்கள் உருவாக்கிக் கொள்வோம். அவற்றை எதற்காகவும் யாருக்காகவும் விட்டுத் தர மாட்டோம்' என்று உறுதி எடுக்கிற தம்பதிகளின் வாழ்வில் வருடங்கள் ஓடலாமே தவிர, வயது கூடுவதே இல்லைதான்!



புதிதாகக் கட்டப்படுகிற பெரிய பெரிய அபார்ட் மென்ட்களில்.. அழகுபடுத்தப்படுகிற சாலைகளில்.. தனியார் வளாகங்களில் பார்த்திருக்கிறீர்களா? எங்கேயோ வேரூன்றி வளர்ந்த.. கிட்டத்தட்ட பாதி மரம் உயரத்தில் இருக்கிற கன்றுகளை கொண்டு வந்து அந்த இடங்களில் நடுவார்கள்.. அழகுக்காக!

புதிய இடத்தில் வேரூன்றும் வரைக்கும் அவற்றுக்கு ஒரு பிடிமானம் தேவை. அதற்காக, சில நாட்களுக்கு.. அல்லது சில வாரங்களுக்கு அவற்றின் கிளைகளை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்து கட்டி வைத்திருப்பார்கள்.. இல்லையேல், அடிக்கிற காற்று அவற்றை சாய்த்து விடும்.

தினமும் தண்ணீர் ஊற்றி, பூச்சிகள் அரிக்காமல் பராமரித்து வருவார்கள். பொதுவாக, அவற்றில் பத்துக்கு ஒன்பது, புதிய இடத்தில் பிரமாதமாக வேர் பிடித்து வளர்ந்து விடும். லேசாகக் கருகியது போலத் தோற்றமளிக்கிற கன்றுகள் கூட சில வாரங்களிலேயே பச்சைப் பசேல் மேக்கப் போட்டு சிரிக்கும். அங்கேயே வேர் விட்டு, கிளை பரப்பி, அந்த மண்ணைத் தன் சொந்தமாக்கிக் கொள்ளும்.

நம் திருமணங்களும்கூட இப்படிப்பட்டவைதான்! கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கும் மேலாக இன்னொரு வீட்டில் வளர்ந்து நிற்கும் ஒரு பெண்ணை வேருடன் கொண்டு வந்து புகுந்த வீட்டில் நடுகிறோம். கொஞ்ச நாட்களுக்கு பார்த்துப் பார்த்துப் பதவிசாக நடந்து கொண்டு, புகுந்த வீட்டினர் அனைவரின் மனதிலும் நீங்காத இடம் பிடிக்கிற அந்த மருமகள், மிகச் சில நாட்களிலேயே அந்த வீட்டைத் தன் ராஜ்ஜியமாக்கிக் கொள்கிறாள். அவளைக் கேட்காமல் அந்த வீட்டில் அணுவும் அசைவதில்லை.

ஆனால், நடப்படுவதற்கும் அந்த மண்ணைத் தன் ராஜ்ஜியமாக்கிக் கொள்வதற்கும் இடைப்பட்ட அந்தச் சில நாட்களை.. அல்லது வாரங்களை.. அல்லது மாதங்களை.. சரியாகக் கையாளத் தெரியாத சிலர்தான் பெரும்பாலும் அபஸ்வரமாகி நிற்கிறார்கள்..

சுகிர்தா கூட அப்படி ஒரு கன்றுதான்! அவளுக்குப் பிரச்னை தன் கணவன் வருண், சரியான அம்மா கோண்டு என்பதில்!

"காலையில குளிக்கிறதுக்கு டவல் எடுத்துத் தர்றதுல இருந்து, ராத்திரி பால் ஆத்திக் குடுக்குற வரை எல்லாமே அவங்கம்மாதான் செய்றாங்க! கல்யாணமாகி இந்த ஒரு மாசத்துல(?!) ஒரு நாள்கூட நான் சாப்பாடு போட்டதில்ல.. டிபன் கேரியர்ல சாப்பாடு எடுத்து வச்சதில்ல.. புருசன் – பெஞ்சாதின்னா.. அது நாலு சுவத்துக்குள்ள மட்டும் இருந்தா போதுமா?" – நினைத்து நினைத்து மறுகினாள் சுகிர்தா.

தான் டவலை பாத்ரூமுக்குள் நீட்ட, கையோடு சேர்த்துப் பற்றி கணவன் தன்னை உள்ளிழுக்க.. ஆவி பறக்கும் அறுசுவை உணவை தான் பாசத்தோடு பரிமாற, தன் கைப்பக்குவத்தில் மயங்கி, கணவன் தன் கரம் பிடித்து முத்தங்களைப் பதிக்க.. என்று தமிழ் சினிமா கனவுகளோடு புகுந்த வீட்டில் நுழைந்தவளுக்கு நிஜம் சுட்டது. காத்திருக்கும் பொறுமையும் இல்லாமல் போயிற்று!

தன் கோபம் முழுவதையும் காட்டுவதற்கான ஒரே இடமாகப் படுக்கையறையை பயன்படுத்தினாள். "நீங்க ஒரு கோழை. உங்கம்மா சேலைக்குப் பின்னால ஒளிஞ்சுக்கிற அம்மா கோண்டு. இந்த ரூமுக்கு வெளியிலயும் என்னை மனைவியா நடத்தணும்.. அப்பதான் நீங்க ஆம்பளை!" என்று வார்த்தைகளால் சுட்டாள்.

பொறுமையின் சிகரம் என்றும் அமைதி சொரூபன் என்றும் பெயரெடுத்த வருணுக்கே கோபம் வரும் அளவுக்கு அவனை அவமானப்படுத்தினாள்.

தீயால் சுட்ட புண்கூட ஆறிப் போகும். சொல்லால் அடித்த அடி நெஞ்சுக்குள்ளேயே நின்றதில் கொஞ்சம் கொஞ்சமாகக் கோபக்காரனானான் வருண்.

'சின்ன வயதிலிருந்து எனக்காகவே ஒவ்வொன்றை யும் பார்த்துப் பார்த்துச் செய்கிற அம்மாவை திடீரென்று எப்படி உதாசீனம் செய்வது?' என்கிற அவனுடைய நியாயம் சுத்தமாகப் புரியவில்லை அவளுக்கு!

"நானா? உன் அம்மாவா?" என்றொரு கேள்வியை அவனிடம் எழுப்பி விட்டு, சுகிர்தா தன் பிறந்த வீட்டுக்குச் சென்றபோது, அவளை துரும்பாக மதிக்கிற மனநிலைக்கு வந்திருந்தான் வருண். அப்போதும், அவன் வாழ்க்கை பட்டமரமாகி விடக் கூடாதே என்று அவனுக்காகக் கவலைப்பட்டவள் அவன் தாய்தான்!

நெருப்பில் இட்ட புழுவைப் போல உள்ளுக்குள் துடித்தபடி, மகனைத் தனிக்குடித்தனம் வைத்தாள் அந்தத் தாய். தாயின் நிழலிலேயே வளர்ந்த வருண், ஏக்கத்தில் தவித்துப் போனான். வெளிப் பார்வைக்கு வேறு வழியின்றி சுகிர்தாவுடன் வாழ்ந்தானே தவிர, உபரியாகப் பத்து நிமிடம் கிடைத்தாலும் தன் தாயைப் பார்க்கப் பறந்தோடிப் போவான். அதுவரை பொய் சொல்லி அறியாதவன் சம்பளம் முதல், வேலை நேரம் வரை எல்லாவற்றையும் மாற்றி மாற்றிச் சொல்லி மழுப்பினான். தாய்க்கான ஏக்கம் அவன் மனதுக்குள் நிரப்ப முடியாத பெரும் பள்ளமாக விழுந்து விட, அந்தப் பள்ளம் சுகிர்தாவை விட்டு அவனை பிரித்துதான் வைத்தது.

வெளிப் பார்வைக்கு மனைவிக்கு நல்ல கணவனாக இருந்தானே தவிர, தாயையும் தன் பிள்ளைகளையும் நேசித்ததில் பத்தில் ஒரு பங்கு கூட சுகிர்தாவை நேசிக்கவில்லை. முழு மனதோடு நேசிக்கப்படுவதின் சுகம் அறியாமலே.. அன்னியோன்யம் என்கிற வார்த்தையின் அர்த்தம் தெரியாமலே.. வீணாய்க் கழிகிறது சுகிர்தாவின் ஒரே ஒரு வாழ்க்கை!

நம் அருகில் எத்தனை சுகிர்தாக்கள்.. எத்தனை வருண்கள்! சுகிர்தா மட்டும் விட்டுக் கொடுத்து வாழ்வதின் சந்தோஷம் அறிந்திருந்தால்.. அதே வாழ்க்கை தேனில் ஊறிய பலாவைப் போல எவ்வளவு ருசித்திருக்கும்..!

அந்த ருசியின் வீரியம் பற்றி வானதியிடம் கேட்டுப் பாருங்கள்.. வாய் வலிக்காமல் சொல்லுவாள்!

# ரொமான்ஸ் ரகசியங்கள்!




**வா**னதிக்கும் ராஜ்குமாருக்கும் இந்த ஜூலை வந்தால், பதின்மூன்றாவது திருமண நாளும் வந்து விடும்.

இத்தனை வருடங்களில் ஒருவர் மீது மற்றவருக்கு இருக்கும் அன்பு பெருகிக் கொண்டுதான் போகிறதே தவிர, துளியாவது குறையக் காணோம். காரணம்.. திருமணமான புதிதில் வானதி போட்ட பலமான நங்கூரம்!

ராஜ்குமார் எப்போதும் அம்மா பிள்ளைதான்! 'புத்தம் புதிதாக மனைவி வந்திருக்கிறாள்.. உண்ணவும் உறங்கவும்கூட தனக்காகக் காத்திருக்கிறாள்' என்ற கிறக்கம் அவனுக்குள் இருந்தாலும் 'அம்மா மனம் நோகும்' என்பதற்காக அவள் மீதான அன்பை அடக்கியே வாசித்தான்! அறைக்கு வெளியே அவளை சட்டையே செய்ய மாட்டான். ஆனால், அத்தனை அன்பையும் அந்த நான்கு சுவருக்குள் பொழிவான்.

வானதிக்கு அதனாலேயே அந்தப் பேரன்பும்கூட கசக்கத்தான் செய்தது! 'உன் அம்மாவின் முன்னால் நீ என்னை தட்டாமாலையெல்லாம் சுற்ற வேண்டாம்.. சாப்பிட்டியா? என்று கேளேன்..' என்று கதறி அழத் தோன்றும் அவளுக்கு.

"அவனைப் பத்தி என்ன தெரியும் உனக்கு!" என்று ஒரு நாளைக்கு பத்து முறை அவள் மாமியார் சொல்வது அவளை மேலும் மேலும் சுட்டெரிக்கும்.

ஆனால், அந்த இடத்தில்தான் வானதி உணர்வுகளை கொஞ்சம் தள்ளி வைத்து விட்டு புத்திக்கு வேலை கொடுத்தாள். தன் கணவனை இப்படி நடந்து கொள்ள வைப்பதும்.. மாமியாரை இப்படிப் பேச வைப்பதும்.. எதிர்க்கட்சியினரின் சதியோ, தீவிரவாதிகளின் நாச வேலையோ அல்லவே! முழுக்க முழுக்க ஒரு தாயின் பாசமும் மகனின் நேசமும்தானே!

இத்தனை பிரியத்தைத் தன் மகனிடம் காட்டத் தெரிந்த ஒரு தாய்க்கு அதைத் தன்னிடமும் காட்டத் தெரியும்தானே! தாயின் மனம் சங்கடப்படக் கூடாது என்று நினைக்கும் ஒரு மகனுக்கு மனைவியின் காதலும் புரியும்தானே! நீர் அடித்து நீர் எப்படி விலகும்? நிஜமான அன்பு எப்படி காயப்படுத்தும்?

மாமியாரின் வார்த்தைகளில் இருப்பது விஷமம் அல்ல.. பயம்! எங்கே மருமகள் வந்ததும் நமக்கான முக்கியத்துவம் குறைந்து–விடுமோ என்கிற கலக்கம்! 'நான் உங்களை துரத்தியடிக்க வந்தவள் இல்லை.. உங்கள் மகனோடு சேர்த்து உங்களையும் கூடுதலாக நேசிக்க வந்தவள்–தான்..' என்பதை மட்டும் அவருக்–குப் புரிய வைத்து விட்டால்..

அதைத்தான் செய்தாள் வானதி.

ராஜ்குமார் அலுவலகத்துக்குக் கிளம்பிப் போன பிறகு தன் கல்லூரி கால லூட்டிகளை.. அம்மா வீட்டின் நினைவுகளை.. அத்தனையையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பகிர ஆரம்பித்தாள் மாமியாரிடம்.

மாமியாரும் தன் பிறந்த வீட்டின் பெருமைகளை வாய் வலிக்கும் வரை சொன்னார் வானதியிடம்.

விளைவு.. நேசம் கொண்ட தோழிகளாகிப் போனார்கள் இருவரும்.

"டேய் ராஜ்குமார்.. வீட்டுக்குள்ளயே இருக்குறாள்ல.. பார்க், பீச்னு எங்கயாவது கூட்டிட்டுப் போயேண்டா.. இவன் எப்பவும் இப்பிடித்–தான்மா. சரியான சோம்பேறி. வெளி இடங்களுக்குக் கிளம்பவே மாட்டான்!"




இருவருக்கும் அம்மாவாகிப் போன அந்தத் தாயின் ஆசியுடன் பைக்கில் பறந்தார்கள் இருவரும்!

"உங்க அம்மாவுக்கு இருமல் ரொம்ப இருக்குப்பா. சாயந்திரம் நம்ம டாக்டர்கிட்ட அப்பாயின்மென்ட் வாங்கிடுங்களேன்" – இப்படி அவள் அக்கறை காட்டிய தினங்களில் எல்லாம் கூடுதல் இனிப்போடு கழிந்தன அவர்களின் இரவுகள்.

'மனிதர்கள் கண்ணாடியைப் போன்றவர்கள். நீங்கள் அவர்களிடம் எதைக் காட்டுகிறீர்களோ அதையே தருவார்கள்' என்ற வாசகம் எத்தனை உண்மை என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தாள் வானதி.

இந்த 13 வருடங்களில் நிலைமை அப்படியே தலைகீழாகி விட்டது.

"ஏம்மா வானதி.. அவனை இன்னும் காணோமே.. ஆபீஸ்லருந்து லேட்டா வர்றதா ஏதாவது சொன்னா–னாம்மா?"

– தன் மகனையே இவள் மூலமாகத் தொடர்பு–கொள்ளத் தயாராகிவிட்டார் அந்த மாமியார்.

"எங்க அக்கா பையன் கல்யா ணத்துக்கு இன்–விடேஷன் கொடுத்தாங்க இல்லியாம்மா.. அவங்க நம்ம வீட்டுல எல்லா கல்யாணத்துக்கும் வந்–திருக்காங்க.. செய்முறை எவ்ளோ செய்யலாம்னு நினைக்கிறே?"

– எல்லாவற்றுக்கும் ஆலோசனை கேட்கிறார் மாமனார்.

பிரச்னைகளும் வருவதுண்டுதான். தாய்க்கும் மகளுக்குமே ஆயிரம் சண்டைகள் வருகையில், மாமியார் – மருமகளுக்கிடையே வராதா என்ன? அதிகம் வேண்டாம்.. ஒற்றை வார்த்தை போதுமே வீடு பற்றி எரிய!

அப்போதும் அதை அணைப்பவள் வானதிதான். உருகி வழிந்தாலும் நெருப்பையே கிரீடமாகச் சூட்டிக் கொள்ளும் மெழுகுவர்த்தியைப் போல, விட்டுக் கொடுத்ததால் உயர்ந்து நின்றாள் வானதி!

"என்ன சொக்குப்பொடி போட்ட வானதி? 'வானதி.. வானதி..'னு மூச்சுக்கு முந்நூறு தடவை சொல்றாங்க அத்தை?" ஏக்கத்துடன் கேட்பார்கள் ஓரகத்திகள்.

"அம்மாவுக்கு வானதி அண்ணின்னா கொஞ்சம் ஸ்பெஷல்தான்!" நொடிப்பாள் நாத்தனார்.

"அம்மாவுக்கு மட்டுமில்ல.. எல்லாருக்கும்தான் வானதின்னா ஸ்பெஷல்! அவ அப்பிடி யார் மனசும் கோணாம நடந்துக்கறா.." என்று அந்தத் தீயில் கொஞ்சம் எண்ணெயை விடுவார் மாமனார்.

அத்தனையையும் கண்டும் காணாத மாதிரி மனசு கொள்ளாத பெருமையுடன் பார்த்துக் கொண்டிருக்கும் ராஜ்குமார், வானதிக்கு மட்டும் கேட்கும் குரலில் பாடுவான்..

"ஆப்பிள் பெண்ணே நீ யாரோ..!"

# ரொமான்ஸ் ரகசியங்கள்! – 16



**கொ**ஞ்சம் யோசித்துப் பாருங்கள்.. கடைசியாக நீங்கள் மிக மிக மகிழ்ச்சியாக இருந்த தருணம் எது?

அண்ணன் திருமணத்துக்காக விலையுயர்ந்த பட்டுப் புடவையை வாங்கிக் கொண்ட நிமிடமா? இல்லை, நான்கு நாள் ஹனிமூன் பயணத்தில், ஊட்டியை உள்ளங்காலால் அளந்த உல்லாசப் பொழுதா?

இவையெல்லாமே சந்தோஷ தருணங்கள்தான்! ஆனால், மிக அதிக சந்தோஷத்தைத் தந்தது.. கணவர் வர ஒன்பது மணிக்கு மேல் ஆகும் என்று நினைத்திருந்தபோது, ஐந்து மணிக்கே வந்து பீச்சுக்கு அழைத்துப் போனாரே.. அந்த செவ்வாய்க் கிழமையாகத்தான் இருக்கும்.

எப்போதும் அழகு காட்டி நிற்கிற செடி, கொடிகளைவிட சின்ன மழையில் பொசுக்கென்று எட்டிப் பார்க்கும் காளான் அழகு! வனமெல்லாம் நடந்து நடந்து தேயும் நிலவை விட எப்போதாவது காட்சி தரும் வால் நட்சத்திரத்துக்கு சுவாரஸ்யம் அதிகம்! எதிர்பார்க்காமல் கிடைக்கும் மகிழ்ச்சிகளும் அப்படித்தான்.. அதற்கு உலகையே கூட விலையாகத் தரலாம்.

அதுபற்றிக் கேட்டால், திருமணமாகி 2 வருடங்கள் உருண்டோடி விட்ட இன்றைக்கும்கூட, கண்கள் தாழ, முகமெல்லாம் சிவக்க, வெட்கத்தில் அமைதி காப்பாள் நிவேதா.. சதீஷின் மனைவி!

இத்தனைக்கும் சதீஷ் பெரிதாக ஒன்றும் செய்து விடவில்லை.. அப்போதுதான் கல்யாணமான ஜோரில் புத்தம்புது மனைவிக்கு தினமும் பூ வாங்கிப் போனான்.. பல கணவர்களும் தங்கள் மனைவிகளுக்கு வாங்கிப் போன அதே பூதான்! அதில் எங்கே சதீஷ் மாறுபட்டான்? அது நிவேதாவுக்–கல்லவா தெரியும்!

முதல் ஒரு வாரம், அவனைத் தன் விரல் நுனியைக் கூடத் தொட விடவில்லை நிவேதா. அத்தனை பயம்.. கூச்சம்! சதீஷுக்குள்ளும் வீற்றிருந்தன ஆயிரம் தயக்கங்கள். நண்பர்களும் சில சினிமாக்களும் மட்டுமே காதல் பாடம் எடுத்திருந்ததில் நிவேதாவை நெருங்கினாலே வியர்த்தது அவனுக்கு! ஹீரோக்கள் மரத்தைச் சுற்றி ஆடுகிற டூயட்டைப் போல அத்தனை எளிதாக இல்லை நிஜ ரொமான்ஸ்!

சரியாக எட்டாம் நாள்.. நிவேதாவுக்கு மாதவிலக்காகி விட, தன் அம்மா சொல்லிக் கொடுத்ததன் பேரில், தயக்கத்துடனேயே சதீஷுக்கு போன் செய்து சொன்னாள் விஷயத்தை! "இன்னிக்கு.. பூ.. வாங்கிட்டு வர வேணாமாம்" கஷ்டப்பட்டு அதையும் சொல்லிவிட்டு வைத்தாள்.

அங்கேதான் தன் அன்பைக் கொட்டினான் சதீஷ். அன்றைக்கும் பூ வாங்கிக் கொண்டு போனான்.

'என் மனைவியை நான் நேசிக்கிறேன்.. அவள் சுகவீனமாக இருந்தாலும் சோர்வுற்றுத் தெரிந்தாலும் என் அன்பு மாறுவதே இல்லை' – இதைச் சொல்லாமல் சொன்னது அந்தப் பூச்சரம்!

அந்த ஒரு வாரமும் அவன் வரும் நேரம் தலை வாரி, பூச்சூட தயாராக இருந்தவள், அன்று உடல் வலியைத் தாங்க முடியாமல் படுத்திருந்தாள். அறையினுள் நுழைந்த சதீஷ், வாடிப் போய்க் கிடந்த நிவேதாவின் விரல்கள் பற்றி அருகில் உட்கார்ந்தான். திடீர் ஸ்பரிசத்தில் திடுக்கிட்டு எழுந்தவளின் கையை அழுத்தி, படுக்கச் சொன்னான்.

"என்னப்பா.. என்ன செய்யுது?" என்றவன், அவள் தடுக்கத் தடுக்கக் கேட்காமல் மெதுவே அவள் கைகளைப் பிடித்து விட்டு, கால்களை அமுக்கி விட, அந்த இதம்.. புத்தம் புதிதான அந்த ஸ்பரிசம்.. நிவேதாவை என்னென்னவோ செய்தது. விரல் நுனி வரை வெட்கம் பூசி, எழுந்து, முகம் கழுவின நிவேதா–விடம் பூவை நீட்டினான் சதீஷ். அந்தப் பூவில்தான்.. திடுமென்று வெளிப்பட்ட அந்த அன்பில்தான் ரொம்பவே உருகிப் போனாள் நிவேதா.

பூவைத் தலையிலும் சதீஷை இதயத்திலும் மொத்த–மாக அவள் சூடிக் கொண்டது அன்றைக்குத்தான்! அவர்கள் இருவருக்குள்ளும் பூத்த அன்னியோன்யப் பூ, காயாகி, கனிந்ததும் அந்தச் சில நாட்களின் முடிவில்தான்! இந்த சர்ப்ரைஸ் சந்தோஷத்தின் ருசியை சதீஷுக்கும் காட்டியிருக்கிறாள் நிவேதா.

ஆபீஸில் இருக்கும் அவனுக்கு திடீரென்று போன் செய்வாள்.. "உங்களுக்குப் பிடிச்ச பால்கோவா பண்ணியிருக்கேன். நெய் அதிகம் போட்டுட்டேன் போல.. ரொம்ப மணக்குது!" என்பாள்.

"உங்களுக்குப் பிடிச்ச பிங்க் புடவை கட்டி, நீங்க வாங்கிக் கொடுத்த வளையைப் போட்டு.." – அவனுக்காக தான் செய்திருக்கும் அலங்காரங்களை ஈவு இரக்கமில்லாமல் விவரிப்பாள்.

ஆபீஸில் இருப்புக் கொள்ளாது சதீஷுக்கு. "வந்து டறேன்டா.. வேலை முடிஞ்சுட்டா நாலு மணிக்கே வந்துடறேன். இல்ல.. வேலை முடியலைன்–னாலும் பர்மிஷன் போட்டு வர்றேன். பர்மிஷன் கிடைக்கலைன்னா ரிசைன் பண்ணிட்டாவது வர்றேன்.." – உணர்ச்சிவசப்படுவான் சதீஷ். உரக்கச் சிரித்து, அதே உணர்ச்சிகளை மறைப்பாள் நிவேதா.

கல்யாணம் ஆகி மூன்றே மாதம்தான் ஆகியிருந்தது. அதற்குள் சதீஷ் வேலை விஷயமாக வெளியூர் போக வேண்டி வந்தது. கொஞ்சநஞ்சம் இல்லை.. முழுதாக பதினைந்து நாள்! "நாளைக்குக் கிளம்பணும்" என்று சோகமே வடிவாக நிவேதாவிடம் வந்து சொன்–னான். வருத்தப்படவில்லை அவள். அன்றே அவனை அழைத்துக் கொண்டு கடைக்குப் போனாள்.. அவனுக்காக 'ஐ – பாட்' ஒன்றை வாங்கினாள். பயணத்தின் போது பாட்டுக் கேட்க வீட்டு கம்ப்–யூட்டரில் இருந்து காதல் பாடல்களாக அதில் இறக்கிக் கொடுத்தாள்.

ரயிலில் வைத்து அதை ஆன் செய்தான் சதீஷ்.. பாட்டு ஓடவில்லை.. 'வந்துடறேன்டா.. வேலை முடிஞ்சுட்டா நாலு மணிக்கே வந்துடறேன்..' சதீஷின் குரலே கேட்டது. வெவ்வேறு தருணங்களில் நிவேதாவிடம் அவன் போனில் பேசியது.. கொஞ்சியது.. எல்லாமே வரிசை கட்டி

வந்தது. அத்தனையையும் ரெகார்ட் செய்திருக்கிறாள்.. அதைக் கொடுத்தும் அனுப்பியிருக்கிறாள் அந்தக் குறும்புக்காரி.

பதினைந்து நாளும் அந்தக் கொஞ்சல்களையே கேட்டுக் கொண்டு, உறக்கம் கொள்ளாமல் அவன் தவித்த தவிப்பு.. அப்பப்பா.. ஊர் திரும்பியதும் இரண்டு நாள் விடுப்பு தேவைப்பட்டது அவனுக்கு!

இன்னும் மூன்று மாதம் கழிந்தது. நிவேதா–வின் வயிற்றில் கருவொன்று வளர்வதை உறுதி செய்தார் மருத்துவர். அன்றைய இரவு.. அல்வா, குங்குமப் பூ என்று வழக்க–மானவற்றை விட்டுவிட்டு ஒரு வாழ்த்து அட்டையோடு வந்தான் சதீஷ். அதில் அவன் கைப்பட ஒரு சினிமா பாடலை கவிதையாக எழுதியிருந்தான் இப்படி..

**காதல்வழிச் சாலையிலே**
**வேகத்தடை ஏதுமில்லை..**
**நாணக்குடை நீ பிடித்தும்**
**வேர்வரைக்கும் சாரல்மழை!**

# ரொமான்ஸ் ரகசியங்கள்! - 17




'நில், கவனி, செல்!'

- ரயில்வே கிராஸிங்கில் மட்டுமல்ல.. வாழ்க்கையின் சிக்கலான நேரங்களிலும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய மந்திர வார்த்தைகள் இவை!

வினோத்தின் வாழ்க்கை, இந்த வார்த்தைகளால் காப்பாற்றப்பட்டது ஒரு அதிசயம்தான்!

மூன்று வருடங்களுக்கு முன் நடந்த அந்த நிகழ்வுகளை அடிக்கடி நினைத்துக் கொள்வான் வினோத். ஒரு மின்னல் மாதிரி திடீரென்றுதான் அவன் வாழ்வில் நுழைந்தாள் சுஜா.

பிரபல வங்கியின் முக்கிய கிளையின் மேலாளர் வினோத். அழகான, பொறுப்-பான மனைவி நீலா, பாசத்துக்கும் பந்தத்துக்குமாக இரு பிள்ளைகள்.. சின்னதாக ஒரு கார், 1000 சதுர அடியில் சொந்த ஃப்ளாட்.. என்று மற்றவர்கள் பார்த்துப் பொறாமைப்படும் வாழ்க்கை வாய்த்திருந்தது வினோத்துக்கு!

தினம் தினம் அவனுடைய வங்கிக்கு வந்து போகும் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களில் ஒருத்தி சுஜா. லட்சங்களில் பணம் டெபாசிட் செய்பவள் என்பதால், அதிகாரியான இவன் அறை வரை வந்து செல்லும் உரிமை பெற்ற மிகச் சில பணக்காரர்களில் ஒருத்தி! கணவர் வளர்ந்து வரும் பிசினஸ் மேன்.. லட்சங்களில் புரளும் வருமானம்.. அத்தனை பணத்துக்கும் ஒரே வாரிசாக பள்ளியில் படிக்கும் மகள்.. பொதுவாக பணக்காரப் பெண்மணி-கள், லேடீஸ் கிளப்பிலும் ஷாப்பிங்கிலும் பியூட்டி பார்லரிலும் பணத்தைக் கரைப்பவர்களாகத்தான் இருப்பார்கள் என்பது வினோத்தின் அனுபவம் போட்டிருந்த கணக்கு.

ஆனால், வித்தியாசமாக இருந்தாள் சுஜா. கணவர் பிசினஸில் சம்பாதிக்கிற பணத்தை ஷேர்களிலும் மியூச்சுவல் ஃபண்ட்களிலும் முதலீடு செய்து இன்னும் இன்னும் பெருக்குகிற புத்திசாலி அவள். சாதாரண காட்டன் புடவையில் அவள் உலா வந்த இயல்பு, வங்கி பியூனிடமும் அவள் காட்டிய மரியாதை.. இதெல்லாமே அவள் மீது அவனுக்கு நன்மதிப்பை ஏற்படுத்தின.

முதலீடுகள் பற்றியெல்லாம் வினோத்திடம் டிப்ஸ் கேட்பதில்தான் அவர்களுடைய நட்பு துவங்கியது. மிக விரைவிலேயே முதலீடுகள் தாண்டியும் பேசத் துவங்கினர் இருவரும்.

அப்படி ஒரு சமயத்தில்தான் தன் அலுவலகத்தில் தனக்கு ஏற்பட்டிருக்கும் பெரியதொரு சிக்கல் பற்றிச் சொல்லிப் புலம்பினான் வினோத். வீட்டுக்குச் சென்ற சுஜா, வினோத்துக்கு ஒரு எஸ்.எம்.எஸ்-ஐத் தட்டி விட்டாள்.

'கடவுள் உன்னை மலை உச்சியின் முனையில் கொண்டுபோய் நிறுத்தினால் இந்த இரண்டில் ஏதே னும் ஒன்று நடக்கும். ஒன்று.. நீ கீழே விழுகையில் அவர் பிடித்துக் கொள்வார். அல்லது, அவர் உனக்கு பறக்கக் கற்றுத் தந்து விடுவார்!'

இந்த மெசேஜைத் திரும்பத் திரும்பப் பலமுறை வாசித்தான் வினோத். அவனுக்குள் புது தைரியம் பிறந்தது. பதிலுக்கு நன்றி அனுப்பினான். அப்படித்தான் துவங்கியது அந்த உறவு! ஆனால், ஒரு சில வாரங்களி-லேயே சுஜாவின் எஸ்.எம்.எஸ்கள் இல்லாத நாட்கள் வினோத்துக்கு வீணான தினங்களாகின.

அடுத்து சுஜாவை நேரில் சந்தித்தபோது அவளிடம் இயல்பாக பேச, பழக முடியாமல் தடுமாறிப் போனான் வினோத். 'ச்சே.. தப்பு இல்லையா! அவங்க இன்னொருத்தர் மனைவி!' என்று பல கவ சங்களை முன்னால் நிறுத்தி, இயல்பாக சுஜாவிடம் பேசத் துவங்கியபோது.. அவளிடமும் அதே தடு மாற்றத்தை உணர்ந்த கணத்தில் அவன் தனக்குள் விதித்திருந்த சுய கட்டுப்பாடுகள் எல்லாம் காற்றில் பறந்தன.

காதல் பாடல்களெல்லாம் புது அர்த்தம் தந்தன. மனைவியிடம்கூடப் பேசுவதற்கு விஷயங்கள் இல்லாமல் போனது. அதை அடுத்த இரு தினங்கள்.. தன் மனம் போன போக்கில் அவன் மிதந்து கொண்டிருந்தபோதுதான் 'நில்.. கவனி.. செல்..' என்கிற வாசகங்கள் அவன் கண்களில் பட்டன. அவை அவனுக்கு எதையோ உணர்த்தின.

'ஒரு வாகனமே தன் இஷ்டத்துக்கு ஓட முடியாது. கவனிக்காமல் போனால், பெரும் விபத்து நேரிட்டு விடும் என்றால், ரத்தமும் சதையுமான தான் இப்படி இன்னொரு பெண்ணின்.. அதுவும் வேறொருவருடைய மனைவியின் நினைவாக இருப்பது எத்தனை பெரிய அழிவில் தன்னைக் கொண்டுபோய் விடும்!'

சட்டென்றுதான் சுய உணர்வடைந்தான் வினோத். தலையை உலுக்கிக் கொண்டான். 'இல்லை.. இல்லவே இல்லை.. குருவிக் கூட்டைப் போன்ற அழகான குடும்பம் எனக்கு இருக்கிறது. என்னை நேசிக்கிற, எனக்காகவே யோசிக்கிற, சின்னச் சின்ன விஷயத்தையும் எனக்காகப் பார்த்துப் பார்த்துச் செய்கிற நீலா, கடவுள் எனக்குக் கொடுத்திருக்கும் கொடை. இப்படி ஒரு மனைவி அமையாமல் தத்தளிக்கும் எத்தனையோ பேரைத் தினம்தினம் பார்க்கிறேன். விநாடி நேரத் தடுமாற்றம், 'கள்ளக் காதலால் மனைவியை வெட்டிக் கொலை செய்த கணவன்' என்றும் 'தற்கொலை செய்து கொண்ட மனைவி' என்றும் மொத்தக் குடும்பத்தையும் உலுக்கிப் போட்டதை தினசரிகளில் வாசிக்கிறேன்.

இந்த இனிமையான இல்லறத்தில் எந்தப் புயலும் வீசி விடக் கூடாது. இந்த அமைதி குலைந்து விடவே கூடாது. இதோ.. நின்று விட்டேன். சுற்றிலும் கவனிக்கிறேன். செல்கிறேன் சரியான பாதையில்!' என்று தீர்மானித்தான்.

முதல் காரியமாக மனதைக் கல்லாக்கிக் கொண்டு பழைய சிம் கார்டைத் தூக்கி எறிந்து புதிய சிம் வாங்கினான். போனிலும் நேரிலும் சுஜா தொடர்பு கொண்டபோது அவசர வேலை என்று மனதைக் கல்லாக்கிக் கொண்டு புறக்கணித்தான்.

ஆண் - பெண் ஈர்ப்பு என்பது காய்ச்சல் மாதிரியான நோய் கிடையாது.. கொஞ்சம் கொஞ்சமாக மருந்து கொடுத்தெல்லாம் அதைச் சரி செய்ய முடியாது. நோயின் தீவிரம் அதிகரிக்கத்தான் செய்யுமே தவிர, இம்மியளவும் குறையாது. கண்டுபிடித்த நிமிடத்தில் அறுவை சிகிச்சை செய்து வெட்டித் தூக்கி எறிந்தால் மட்டும்தான் நிம்மதியாக உயிர் வாழ முடியும்.

அதைத்தான் செய்தான் வினோத். 'சுஜாவின் மனம் என்னபாடு பட்டிருக்கும்?' என்றொரு கேள்வி எழுந்ததுதான் அவன் மனதில்! அதற்கும் அவனிடம் பதில் இருந்தது. அவள் வாழ்க்கையும் தன் வாழ்க்கையும் காப்பாற்றப்படுவதற்காக இந்த நட்பை இழப்பதில் தவறொன்றுமில்லை!

எதையெல்லாம் செய்ய வேண்டும் என்பது மட்டுமல்ல.. எதையெல்லாம் செய்யக் கூடாது என்பதும் கூட வலிமையான இல்லறத்துக்கு அஸ்திவாரம்தானே!

# ரொமான்ஸ் ரகசியங்கள்! - 18



**ஊ**ர் முழுக்க நல்ல பெயர் ராஜேஷுக்கு.

"ஆளு.. ரொம்ப ஸாஃப்ட்! அதிர்ந்துகூடப் பேசத் தெரியாது.. வசந்தி ரொம்பவும் கொடுத்து வெச்சவ.." என்று ஆளாளுக்கு சர்டிஃபிகேட் கொடுப்பார்கள். ஆனால், வீட்டுக்குள் அவன் எப்படி என்பது வசந்திக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்.

கல்யாணம் ஆன முதல் நாள் ராஜேஷ் அவளிடம் பேசிய முதல் டயலாக் இது.. "மேடையில எல்லாம் பேசுவியாமே..? எனக்கு ரொம்பப் பேசினா பிடிக்காது!" - வெளி உலகம் சொல்வது போலவே அவன் வார்த்தைகளில் ஆத்திரம், அவசரம் என்று எதுவும் இருக்காது. மென்மையாகவும் பக்குவமாகவும் நேர்த்தியாகவும் அடுத்தவர் மனதைக் காயப்படுத்திவிடும் சூட்சுமம் அவனுக்குத் தெரியும்.

"அம்மா வீடு இங்க இருந்து நாலு கிலோமீட்டர்லதானே இருக்கு.. நான் அடிக்கடி போய்ட்டு வரலாம்தானே?"

"போலாம்.. ஆனா, வரக் கூடாது!"

- இப்படி சுருக்கமாகவும் சுருக்கென்று தைக்கும் படியும்தான் இருக்கும் ராஜேஷின் பதில்கள். இதற்கு பயந்தே அவனிடம் கேள்வி கேட்பதை அடியோடு நிறுத்திவிட்டாள் வசந்தி. அதனால்தான் அந்த வீட்டில் சண்டையில்லை, சச்சரவில்லை.. சந்தோஷமும் இல்லை.

மனைவி, தன் வாய்க்கு பூட்டுப் போட்டுக் கொண்டது ராஜேஷுக்கு வசதியாகப் போனது. சொல்லப் போனால் அவன் எதிர்பார்த்ததும் அதைத்தான். சமைப்பது, பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புவது, தன்னை அலுவலகத்துக்கு அனுப்புவது, தானும்

வேலைக்குப் போவது.. இவற்றுக்காகவே பிறவி எடுத்து வந்தவள் அவள் என்றொரு நினைப்பை உள்ளுக்குள் வளர்த்துக் கொண்டான் அவன். அவளுக்கென்று ஒரு மனம் உண்டு, அதில் விருப்பு வெறுப்புகள் உண்டு என்பதைப் பற்றியெல்லாம் அவன் சிந்திக்கவே தயாராக இல்லை.

'எந்தக் கடையில் மளிகைப் பொருட்கள் வாங்க வேண்டும்' என்பதில் தொடங்கி, 'பிள்ளைகளை எந்தப் பள்ளியில் சேர்ப்பது?' என்பது வரை எல்லாமே ராஜேஷின் முடிவுதான். வசந்திக்காக எடுக்கப்படும் தீபாவளிப் புடவையின் கலருக்காகக்கூட அவளிடம் கருத்துக் கேட்டதில்லை அவன்.

இதற்கெல்லாம் அதிகபட்சமாக ஒரு மனைவி என்ன செய்ய முடியும்? சாப்பிடாமல் உண்ணாவிரதம் இருக்கலாம்.. ராஜேஷ் அதைப் பற்றி விசாரிக்கக் கூட மாட்டான். சமைக்காமல் இருக்கலாம்.. ராஜேஷ் வெளியில் சாப்பிட்டுக் கொள்வான். பேச மாட்டேன் என்று கோபிக்கலாம்.. ராஜேஷுக்கு அது சந்தோஷம்தான்.

இப்படிப்பட்ட பிரம்மாஸ்திரங்கள் அனைத்தையும் பயன்படுத்திப் பார்த்துவிட்டுத்தான் பணிந்து போகத் தொடங்கினாள் வசந்தி. வேறு என்ன செய்ய முடியும்..? கண்ணைக் கசக்கிக் கொண்டு பிறந்த வீட்டுக்குப் போகும் அளவுக்கு இது பெரிய பிரச்னை இல்லை. "உன் புருஷன் என்ன குடிச்சுட்டு வந்து உன்னை அடிக்கவா செய்யிறார்..?" என்று யாரேனும் கேட்டால், இவளிடம் பதில் இல்லை!

**தூ**சி படிந்த ஜன்னல்
சுவடு படிந்த தேநீர் கோப்பை
பறிக்காத மல்லிகை மணம்
கிழிக்கப்படாத காலண்டர்
தேதிகள்..
என அத்தனையும்
பறைசாற்றுகின்றன
நீ
ஊருக்குச்
சென்றுவிட்டதை!
- ***லசி***

'மருந்துக்குக் கூட மனைவியை மதிக்காமல் ஒரு மனிதன் இருப்பானா? ரத்தமும் சதையுமாக ஒரு மனுஷி இருக்கிறாள் என்கிற உணர்வே இவருக்கு இருக்காதோ' என்றெல்லாம் நினைத்து நினைத்து நொந்து போயிருக்கிறாள் வசந்தி.

வசந்தியோடு ராஜேஷுக்கு விரோதமில்லை. 'வேலைக்குச் சென்று சம்பாதிக்கிறவள்.. எங்கே கொஞ்சம் இடம் கொடுத்தாலும் தன்னை டாமினேட் செய்து விடுவாளோ' என்கிற பயம்! 'ஆரம்பத்துலயே இறுக்கிப் பிடிச்சிடு.. தும்பை விட்டுட்டு வாலைப் பிடிக்க நினைக்காத..' என்கிற உபதேசங்கள்.. எல்லாம் சேர்ந்து கொண்டு ஆட்டிப் படைக்கின்றன அவனை!

ஒருவருக்கொருவர் பகிர்ந்து, எல்லாவற்றிலும் விட்டுக் கொடுத்து, நேசிப்பதில் கடன்காரர்களாகி.. ஒரு நேரம் அதிகாரம் செலுத்தி, மறு நேரம் அடங்கிப் போய்.. கோபித்து, கோபிக்க அனுமதித்து.. நானாகவும் நீயாகவும் இல்லாமல் நாமாக வாழ்கிற பேரின்பத்தின் ருசி அறியாதவர்கள் ராஜேஷ் போன்றவர்கள்!

ஜீவாவிடம் கேளுங்கள்.. அந்த சுவை பற்றி!

"கத்தரிக்கா எனக்குப் பிடிக்காதுனு தெரியும்ல.. ஏன் செய்ற?" - அலுவலகத்திலிருந்து வந்ததும் வராததுமாகக் கத்துவான் ஜீவா.

"அப்புறம் எந்தக் காயைத்தான் சமைக்க? 'கேரட் இனிக்குது.. பாவக்கா கசக்குது.. கோவக்காய்லாம் ஒரு காயா?'னு எல்லாத்துக்கும் நொட்டை சொல்றீங்க.. அதான், எனக்குப் பிடிச்சதா சமைச்சுட்டேன்.. ஏன்.. இந்த வீட்டுல எல்லாம் உங்க இஷ்டப்படிதான் நடக்கணுமா? ஒரு காய்கூட எனக்குப் பிடிச்ச மாதிரி சமைச்சுக்கக் கூடாதா?" - நொடிப்பாள் அக்ஷயா.

டிபன் பாக்ஸ் கழுவுகையில் பொரியல் இருக்கும் கிண்ணம் மட்டுமில்லாமல் எல்லா கிண்ணங்களுமே கனத்து அவன் கோபத்தைத் தெரிவிக்கும். உருகிப் போவாள் அக்ஷயா.

'ஐயையோ.. இது(?!) மத்தியானம் சாப்பிடவே இல்லையா..' என்கிற ஆத்திரமும் அக்கறையும் அடுத்தடுத்து அவளுடைய எல்லாச் செயல்களிலும் வெளிப்படும்.

அவனுக்கு ரொம்பவும் பிடித்தமான உருளைக்கிழங்கு சிப்ஸும் ஏலக்காய் டீயும் ஒருபக்கம் தயாராக, சட்டென்று முகம் கழுவி, தலை வாரி, மறுநாள் காலைக்காக வைத்திருந்த பூவைச் சூடி, முன் அறையில் உட்கார்ந்து சேனல் மாற்றிக் கொண்டிருக்கும் கணவன் கையில் டிபனைக் கொண்டு போய்க் கொடுப்பாள்.

அந்த பளிச் அலங்காரத்தையெல்லாம் தாண்டி, அவள் கட்டை விரலில் ரத்தம் எட்டிப் பார்க்கும் சிராய்ப்புதான் தெரியும் அவனுக்கு!

"அதுவா..? சிப்ஸுக்கு சீவும்போது பட்டுடுச்சு." - அந்த விரலைப் பின்னால் மறைப்பாள் அக்ஷயா.

"சிப்ஸ் செஞ்சாலே இப்படித்தானே ஆகுது? அப்புறம் எதுக்கு செய்யணும்..? இனிமேல் நான் சிப்ஸே சாப்பிடப் போறதில்லை. நாளைக்கும் கத்தரிக்கா வை. சாப்பிட்டுப்

பழகிக்கறேன்.." இறுக்கமாகச் சொல்லிவிட்டு மெதுவாக சிரிக்கத் தொடங்குவான் ஜீவா. சிரிப்பின் முடிவில் சிப்ஸ் தட்டு தூரத்தில் இருக்கும். அக்ஷயா அவன் கைகளில் இருப்பாள். அது இன்னமும் மாலை நேரம்தான் என்பதும்கூட மறந்து போகும் அவர்களுக்கு!

# ரொமான்ஸ் ரகசியங்கள்! – 19



சுமேஷுக்கு ஆபீஸில் வேலையே ஓடவில்லை. வெண்ணிலாவை இரண்டு நாளைக்கு முன் கண்மூடித்தனமாகத் திட்டியதும்.. அவள் அழுகையை நடிப்பென்று விமர்சித்ததும்.. அதனால் இந்த இரண்டு நாட்களாக அவளிடம் பேச்சு வார்த்தையே அற்றுப் போயிருப்பதும்.. அவள் தயார் செய்து வைக்கும் டிபன் பாக்ஸை மட்டும் எடுத்துக் கொண்டு ஒரு வார்த்தை கூடப் பேசாமல் யந்திரம் போல கிளம்பி வருவதும்.. மாறி மாறி அவனை வதைத்துக் கொண்டிருந்தன.

வெண்ணிலாவுக்கு 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்பதுதான் வேதம். தன்னைக் கொட்டிய தேளைக் கூட அடிக்க விட மாட்டாள். 'தூரத்துல எங்கயாவது கொண்டு போய் விட்டுடலாமே' என்று கெஞ்சுவாள். பிறந்த வீட்டில், இருபது லவ் பேர்ட்ஸும், ஒரு கிளியும், மூன்று பூனைக் குட்டிகளும் வளர்த்தவள். தெருநாய்களுக்கெல்லாம் அன்னை தெரசாவாகத் தெரிந்தவள். இன்றும் அந்த அன்பு தொடர்கிறது. ஆனால், சுமேஷுக்கு இதெல்லாம் பிடிக்காது என்பதால் வீட்டுக்குள் எந்த ஜீவராசியும் பிரவேசிப்பதில்லை.

ஒன்றுமில்லை.. அன்று பக்கத்து வீட்டு நாய்க்குட்டியை வெண்ணிலாவின் கையில் பார்த்தவுடன்தான் சுமேஷுக்குள் எழுந்தது அந்தப் பேய்க் கோபம். "நீ எக்கேடும் கெட்டுப் போ.. வீட்டுல மூணு வயசுல ஒரு குழந்தை இருக்கான்ல..? இந்த சனியன் அவனைக் கடிச்சு வச்சா என்ன பண்றது..?" என்று ஆரம்பித்தவன், "மிருகங்களோட பழகுறவளை மிருக ஜென்மம்னுதான் சொல்லணும்.. நீயெல்லாம் ஒரு மிருகத்தையே

கட்டிக்கிட்டிருக்க வேண்டியதுதானே" என்று தீ கக்க ஆரம்பித்தான். எல்லாம் ஆபீஸ் டென்ஷனின் பக்க விளைவுகள்தான். வீட்டுக்கு வீடு வாசப்படி!

"ச்சே.. என்ன மனுஷன் நான்..? கல்யாணமாகி அஞ்சு வருஷம் கழிச்சும் சொந்தப் பொண்டாட்டியைப் புரிஞ்சுக்கலையே.. அவ எப்பவுமே இப்படித்தான்னு தெரியுமே.. அதுக்குப் போய் அவளை.." அவன் மனம் நிலைகொள்ளாமல் தவித்தது. 'இன்னிக்காவது நானே போன் பண்ணி மன்னிப்புக் கேட்டுடணும்..' விறுவிறுவென செல்போனை எடுத்தவன், வெண்ணிலாவின் எண்ணைத் தேடினான். வசந்த்.. வெங்கட்.. விஜய்.. என்ன இது? வெண்ணிலாவின் பெயரையே காணவில்லை!

'எப்பிடி..? ஒரு வேளை நான் தூங்கிட்டிருந்தப்போ அவளே எடுத்து அழிச்சிருப்பாளோ? அந்த அளவுக்கா அவளைக் காயப்படுத்திட்டோம்?' - சுமேஷுக்குக் குற்றவுணர்ச்சி தாங்க முடியவில்லை. 'ஒருவேளை, அந்த நம்பரை மனசுல வச்சிருக்கானானு டெஸ்ட் பண்றாளோ? இப்ப என்ன பண்றது?' - யோசனைகள் ஓடிக் கொண்டிருக்கும்போதே அவன் செல்போன் ஒலித்தது.

அழைப்பவரின் பெயர் வித்தியாசமாக, 'உன் செல்லம் பாவமில்ல..?' என்று நீளமாக வந்தது. எடுத்தான். மறுமுனையில் "சாப்ட்டீங்களா?" என்றாள் வெண்ணிலா. கள்ளி! சுமேஷுக்குத் தெரியாமல் அவன் போனை எடுத்து தன் பெயரைத்தான் இப்படி மாற்றியிருக்கிறாள். "ஸாரி, சுமி! இனிமே நான் நாய்க்குட்டி, பூனைக் குட்டியையெல்லாம் தொடவே மாட்டேன்" - அவளே தொடர்ந்து பேசினாள்.

'பாவி, மன்னிப்பு கேட்கும் விஷயத்தில் கூட தன்னை முந்திக் கொள்கிறாளே.. இந்த அழகான ராட்சஸி!' என்று பரவசம் பாய்ந்தது அவனுக்குள். 'கடவுளே.. இது பெட்ரூமா இருக்கக் கூடாதா' என்று மனசுக்குள் காட்டுக் கத்தல் கத்தினான். உடனடியாக ஆபீஸில் பர்மிஷன் போட்டுவிட்டு வீட்டுக்கு வந்தான் சுமேஷ். அடுத்த நாள் காலையும் ஒரு மணி நேரம் பர்மிஷன் போட வேண்டியது வந்தது!

வெண்ணிலா எப்போதுமே இப்படித்தான். கல்யாணம் ஆனதிலிருந்து சுமேஷின் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் ரொமான்ஸ் குறையாமல் வைத்திருந்தாள். அவனுக்குப் பிடித்தவற்றை குறித்து வைத்துக் கொண்டு சமைப்பது, ஆட்டோமொபைல் கம்பெனியில் மேலாளராக இருக்கும் அவனுக்கு, புதிதாக அறிமுகமாகவிருக்கிற கார்கள் பற்றிய செய்தியை வெட்டி எடுத்துக் கொடுப்பது.. என்று தனது அன்பால் ஒவ்வொரு நாளையுமே அசத்தி விடுவாள்.

இத்தனை செய்கிறவளுக்கு சுமேஷ் என்னதான் பரிசு தருவான்? வெறும் புடவையும் நகையுமா? இல்லை! வித்தியாசமாக ஒன்று தர ஆசைப்பட்டான். அதற்காகத்தான் ஒரு நாள் திட்டமிட்டான்.

"டி.நகர் வரை வர்றேல்ல.. அப்பிடியே ஒரு ஆட்டோ எடுத்துட்டு என் ஆபீஸ்க்கு வந்திடு. ரெண்டு பேருமா சேர்ந்து வீட்டுக்குப் போய்டலாம்" என்று காலையிலேயே அவன் கட்டளையிட, அவள் குழந்தையும் ஷாப்பிங் கவர்களுமாக அங்கு போய்ச் சேர்ந்தாள்.

வாசல் வரை வந்து உள்ளே அழைத்துப் போனவன், தன் அறைக்குள் தன் ஸீட்டின் மீது வெண்ணிலாவை உட்கார வைத்து அழகு பார்த்தான். அந்த இருக்கைக்குப் பக்கத்திலேயே ஒரு கண்ணாடி ஜன்னல், 'அது மூன்றாவது மாடி' என்பதை அறிவித்தது. அந்த வளாகத்திலேயே உள்ள மாமரம் ஒன்று தன் கிளைகளால் அந்த ஜன்னலை வருடியிருந்தது. "குட்டிப் பையா.. மாங்கா பாரு.." என்று ஜன்னலைக் காட்டி, குழந்தைக்கு விளையாட்டு காட்டுவதில் மும்முரமானாள் வெண்ணிலா.

"நிலா.. அந்த டிராவைத் திறயேன்" என்றான் சுமேஷ்.

திறந்தால் அதற்குள் கவர் பிரித்த ஒரு பாப்கார்ன் பாக்கெட் இருந்தது. அதிலிருந்து ஒன்றிரண்டு பாப்கார்ன்களை எடுத்தான். கண்ணாடி ஜன்னலை லேசாகத் திறந்து, சற்று நீண்டிருக்கும் ஸ்லாபில் அந்த பாப்கார்னை வைத்து மூடினான்.

"வெய்ட் பண்ணு.. சில விருந்தாளிங்க வருவாங்க" என்று அவன் சொல்லி முடிக்கும் முன், பெரிய்ய்ய்ய வாலை ஆட்டியபடி ஓடி வந்தார்கள் அந்த விருந்தாளிகள். பாப்கார்னை தங்கள் முன்னங்கால்களால் எடுத்துச் சாப்பிட்ட அந்தச் சின்னஞ்சிறிய அணில்களை.. திறந்த வாயும் விரிந்த கண்களுமாகப் பார்த்த நிலா சந்தோஷத்தில் தன்னை மறந்து குதித்தே விட்டாள்.

வீடு திரும்புகிற வழியெல்லாம் அணில் பேச்சுத்தான்! "ச்சே! என்ன அழகு சுமி..! ஒருமுறை டி.வி-யில மட்டும்தான் அணிலை இவ்வளவு க்ளோஸா பார்த்திருக்கேன். ச்சோ ச்வீட்.. ஐ லவ்யூடா" எனச் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனாள். தாமதமாகத்தான் அவளுக்கு அந்த சந்தேகம் வந்தது.

"சுமி.. உங்களுக்குத்தான் இந்த ஸில்லி ஜீவன்களைப் பிடிக்காதே.. இப்படி பாப்கார்ன் போட்டு ரசிக்கிறதெல்லாம் எப்போத்துல இருந்து?" என்றாள் அவள். பைக்கைக்

கொஞ்சம் ஸ்லோ செய்து, ஹெல்மெட் கண்ணாடியை எடுத்து விட்டுக் கொண்டு அவன் சத்தமாக பதில் சொன்னான்.. "கல்யாணம் ஆனதுல இருந்து!"

"**கடவுளே இது பெட்ரூமா இருக்கக் கூடாதா**?" - **வாய்விட்டே சொல்லிவிட்டாள் வெண்ணிலா**!

## ரொமான்ஸ் ரகசியங்கள்! -20



**ச**ந்தரும் ஷாலினியும் தங்களுடைய முதல் திருமண தினத்தை சமீபத்தில்தான் கொண்டாடினார்கள். நண்பர்களையும் உறவினர்களையும் அழைத்துப் பெரிய விருந்தே வைத்தான் சந்தர். தேடித் தேடித் அவன் வாங்கிய, இளம் பச்சை நிறத்தில் வெண் கற்கள் பதித்த டிசைனர் புடவையில் தேவதையாக ஜொலித்தாள் ஷாலினி.

ஆனால், அடிக்கடி ஷாலினிக்குள் எழும் அந்த சந்தேகம், அந்த நாளின் முடிவிலும் அவளுக்குள் எழுந்தது.. 'நிஜமாகவே நான் சந்தோஷமாகத்தான் இருக்கிறேனா?'

இதை யாரிடம் கேட்பது? எப்படி சரி செய்வது? அடி வயிற்றின் வலி அவளைத் தூங்க விடாமல் செய்தது. சந்தரோ மெல்லிய குறட்டையுடன் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான்.

அன்று மாலையை மனதுக்குள் மீண்டும் ஒருமுறை ஓட்டிப் பார்த்தாள். பேரழகியாக ஜொலித்த ஷாலினியை ஐந்து நிமிடங்களுக்கொரு முறை திரும்பித் திரும்பி சந்தர் பார்த்தபோது.. சந்தருடன் வேலை பார்க்கிற ராணி கிரிதரன் கூட கேலி செய்தாள்.. "அடேங்கப்பா.. அப்படி என்ன சொக்குப் பொடி போட்டு வெச்சிருக்கீங்க ஷாலினி? சந்தர் இப்படி உங்களை விழுங்குற மாதிரி பார்க்குறாரே?"

-அவள் இப்படி கேட்டபோது வெட்கப்படத்தானே வேண்டும் ஒரு பெண்! ஆனால், ஷாலினி பயந்தாள். இன்று நேற்றல்ல.. திருமணம் ஆனது முதலே அப்படித்தான்! இரவு நேரங்கள் அவளுக்கு பயத்தையே தந்தன.

ஒற்றைக்கு ஒற்றையாக வளர்ந்த பெண். அம்மா இல்லை. தோழிகள் இருந்தார்கள் என்றாலும் ச்சீ.. இதையெல்லாம் போய் எப்படி தோழிகளிடம் பேசுவது?

ஆனால், அவளுக்குள் ஓராயிரம் கேள்விகள்..

'செக்ஸ்' என்பதை மிகவும் சந்தோஷமான சமாசாரம் என்றல்லவா நினைத்துக் கொண்டிருந்தாள்! ஆனால், இது இத்தனை வேதனை தருகிற விஷயமா?

முதலிரவின்போது பயந்தது.. அதன் பிறகு தெளியவே இல்லை அவள். சந்தர் காதலோடு தன்னை அணுகும்போதெல்லாம் ஏதேனும் காரணம் சொல்லி அவனைத் தவிர்ப்பது அவளுக்குத் தொடர்கதையாகிப் போனது. அவனும் அதைப்

பெரிய குறையாக நினைக்கவில்லை. 'பாவம்.. சின் னப் பெண்.. களைப்பாக இருக்கிறாள்' என்று நினைத்துக் கொள்வான்.

ஆனால், தாம்பத்ய உறவு என்பது ஒரு அருவருப்பான விஷயமாகவே அவள் மனதில் பதிந்து போனதோ, பல சமயங்களிலும் மனதளவில் மட்டுமல்லாமல் உடலளவிலும் அவள் வேதனைப்பட்டு அவனை சகித்துக் கொள்வதோ, சந்தருக்குத் தெரியவே இல்லை. திருமணமாகி ஒரு வருடம் ஆகிவிட்ட நிலையிலும் அவள் ரொம்பவும் வெட்கப் படுவதாகவே அவன் நினைத்துக் கொண்டான்.

ஆனால், இயல்பிலேயே புத்திசாலியான ஷாலினிக்கு இதில் எங்கோ தவறு நிகழ்கிறது என்பது புரிந்தது. தயங்கித் தயங்கி ஒரு இரவில் சந்தரிடம் தன் நிலையைச் சொல்லியும் விட்டாள்.

அதைக் கேட்டவன் அதிர்ந்து போனான். 'ச்சே! என்ன மனிதன் நான்! மனைவியாகவே இருந்தாலும் அவளுடைய விருப்பம் இல்லாமல் அவளுடன் உறவு கொண்டு.. ஒரு மிருகம் போல நடந்து கொண்டிருக்கிறேனே..' என்று வருந்தியவன், அவளையும் அழைத்துக் கொண்டு செக்ஸாலஜிஸ்ட்டிடம் ஆலோசனை பெறச் சென்றான்.

அந்த நிபுணர் பேசப் பேசப் பல புதிர்களும் விடுபட்டன இருவருக்கும். 'ஃபோர் ப்ளே' எனப்படுகிற உறவுக்கு முந்தைய விளையாட்டுக்கள் எத்தனை அவசியம் என்பது சந்தருக்கும், இருவருமாக மனம் மகிழ்ந்து ஆவலுடன் ஈடுபட வேண்டிய விளையாட்டே செக்ஸ் என்பது ஷாலினிக்கும் புரிந்தது அன்றுதான்.

அத்தனை நாட்களும் இருந்த தயக்கங்களை உதறி, ஷாலினியிடம் மனம்விட்டுப் பேசினான் சந்தர். "உனக்குக் கஷ்டமா இருக்கும்னு எனக்குத் தோணக்கூட இல்லையேடா" என்று அவன் புலம்பப் புலம்ப, அவள் நெகிழ்ந்து போனாள். அவன் தள்ளிப் போகப் போக, 'நம்ம வீட்டுக்காரரை இப்படி கஷ்டப்படுத்துறோமே' என்று நினைத்து அவனை ரொம்பவும் நெருங்கினாள் ஷாலினி.

'ஒருவரை மற்றவர் துன்புறுத்தக் கூடாது.. எதற்காகவும்' என்கிற அந்தக் கவனமும் அக்கறையும் மட்டுமே போதுமானதாக இருந்தது அவர்கள் காதலை வளர்க்க! இந்தச் சிறு விருப்பம் போதுமே.. அதற்கு மேல் பார்த்துக் கொள்ள மாட்டானா மன்மதன்!